# இறையியல் களஞ்சியம்

மலர் :10 யூன் 2004 இதழ் : 20




## தூய ஆவியின் நட்புறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பதிப்பாசிரியர்: | அருட்தந்தை டி.ஆர்.அம்பலவாணர். |
| துணை ஆசிரியர் : | அருட்திரு வி.பத்மதயாளன் |
| ஆசிரியர்குழு : | அருட்திரு.ரி.தேவநேசன் |
| | அருட்திரு.பென்சமின் ஜெயராஜா |
| | அருட்திரு.ஈனோக் பு.புனிதராஜா |
| நிர்வாகி : | திரு.சி.பி.பவிங் |
| ஆலோசகர் : | பேராயர் அறிவர்.எஸ்.ஜெபநேசன் |
| மாணவர்குழு : | சகோ.எஸ்.ஜோன் புவியரசன் |
| | சகோ.எம்.நேசன் கெனடி |
| அச்சுப்பதிப்பு : | COC Graphics Inuvil. |
| வெளியீடு : | இலங்கை கிறிஸ்தவ குருத்துவக்கல்லூரி |
| | மருதனார்மடம் - சுன்னாகம். |
| | (தனிப்பட்ட வினையோகத்துக்கு மட்டும்) |
| Pubication : | Christian Theological Seminary of Srilanka. |
| | Maruthanarmadam-Chunnakam |
| | (For Private circulation only) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் களஞ்சியம்

காலாண்டு வெளியீடு

## IRAI – IYAL KALANJIAM
## TAMIL THEOLOGICAL JOURNAL

CHRISTIAN THEOLOGICAL SEMINARY

இயேசு கிறிஸ்து உலகின் ஒளி

1823 SRI LANKA 1983

யூன் - 2004 இதழ் - 20

இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி,
மருதனார்மடம் - சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| (1) | இறைவணக்கம் தெய்வ அருள் வேண்டல் | 2 |
| (2) | ஆசிரியர் பார்வையில்........... | 3 |
| (3) | யாழ்ப்பாணம் பெற்றெடுத்த.... . | 5 |
| (4) | தூய ஆவியாரின் பெருவிழா. | 13 |
| (5) | என் இறை வேண்டல் | 17 |
| (6) | திருச்சபையும் விளிம்புநிலையில்.......... | 18 |
| (7) | மக்களை வசப்படுத்தும் தொலைக்காட்சி.......... | 24 |
| (8) | ஒரே பொதுவான தூய திருச்சபை. | 29 |
| (9) | WHY ARE A MAN OF HOPE.. | 33 |
| (10) | THE PRIORITY OF THE HOLY SPIRIT. | 34 |
| (11) | அப்பப்பா எத்தனை சபைகள் | 35 |
| (12) | காள மேகப் புலவரின்........... | 36 |
| (13) | இரத்தச் சாட்சிகளின் இரத்தமே.......... | 38 |
| (14) | CHRISTA SEVA ASRAMA......... | 43 |
| (15) | மன்னன் தாவீதின் நற்செய்திப்பணி | 45 |
| (16) | செய்தி மடல். | 50 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவணக்கம்

## தெய்வ அருள் வேண்டல்

❖வா, எங்கள் சுவாமி, வா, இந்த நேரத்திலே,

வந்து நின் சுந்தரக் கையால் தந்திடு நன்மை யெல்லாம்.

❖வந்தனம், வந்தனம், ராசா, சந்ததம் எங்களைக் கா, வா,

வல்லபம் தந்திடைக் கட்டி மாநகரின் வழி சேர.

❖யேசையா, உன்னையல்லாமல் எங்களுக்காரு மில்லை.

நீசரென் றெமை விடாதே, நின்னடி தஞ்சமையா.

❖உன்னடியால் எங்கள் வம்சம் உன்னை அடைந்திடவே,

உச்சித ரட்சண்ய வேலை ஊக்கமாய்ச் செய்திடவே

❖இராப்பகல் எங்களைக் காரும், போக்கு வரத்திலெல்லாம்,

கூப்பிடும் போதெல்லாம் கேட்டு, கொண்டனைத் தன்புசெய்வாய்.

❖கல்வாரி ராயனின் புண்ணியம் கன்மிக னெங்களுக்கே,

அல்லேலுயா சொல்லும் நாங்கள் ஐயனின் பொன்னடிக்கே.– வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பார்வையில்,

இன்று நமது சமுதாயத்தில் நாள்தோறும் நடைபெறும் அக்கிரமச் செயல்களைக் கவனிக்கும்போது – சீரழிந்து போகும் சமுதாயத்தைச் சிராக்குவதற்கான தன்கடமையை நிறைவேற்ற முடியாது திருச்சபை தத்தளிப்பதை நாம் காண்கிறோம். திருச்சபை தன் உறுப்பினரின் விருப்பங்களையும் நாட்டங்களையம் துணை நின்று மேம்படுத்தும் ஒருவகைக் கூட்டுக் குழுவல்ல – அது முக்கியமாகத் தன் உறுப்பினரின் விருப்பங்களுக்கும், வெறுப்புக்களுக்கம், தேவைகளுக்கும் திருப்தியளிப்பதற்கான சங்கமல்ல – அவர்களின் பண்பியல்பை மாற்றியமைக்கவே நிறுவப்பட்ட திரு அவை.

இயேசு கிறிஸ்துவுக்குள் தூய ஆவியாரின் வழி நடத்துதலாலும், வல்லமையினாலும் இறைவனின் நோக்கங்களை நிறைவேற்றவே திருச்சபை அழைக்கப்பட்டது. "திருச்சபை ஒன்று தான் தன் உறுப்பினர் அல்லாதோரின் நலனுக்காக இயங்கும் ஒரே கூட்டுறவுச் சங்கம்" – என்று பேராயர் உவில்லியம் டெம்பிள் கூறினார். இதனைச் சிந்தியுங்கள்.

திருச்சபையின் அருட்பணி நற்செய்தியை அறிவிப்பதுமட்டுமல்ல – அதனைச் செயல்படுத்த வேண்டும். எளிமையானவர்களுக்கு நற்செய்தி உணவளிப்பதே இதைத்தவிர அவர்கட்கு நற்செய்தி வேறில்லை. இதன் அடிப்படையில், திருச்சபை வறுமையால் வாடும் மக்களுக்குச் செய்து வருகின்ற பணிதான் என்ன? பசித்தவனுக்கு உணவளிப்பது இறைபணிக்கு ஒப்பானது. எல்லாத் தானங்களிலும் சிறந்தது அன்னதானம் - "நான் பசியாயிருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்" (மத் 25:35), "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25 : 40), "மக்கள் சேவை மகேசன் சேவை" என்பது பெரியோர் வாக்கு. "தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லையெனில், இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று முழங்கினார் கவியரசர் பாரதியார். ஆனால், இன்று நம்மிற் பலர், இந்த ஜெகமே – அழிந்தாலும் தத்தம் சபைகளைச் சிறப்புற அமைத்தால் போதும் என்ற மனப்பான்மையடன் வாழ்கின்றனர். மேலும் இறையியல் அறிஞர் டியட்றிச் பொன்ஹேபர் 'மனுக்குலத்தின் நன்மைக்கென்றே திருச்சபை வாழும் போது தான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தன் உண்மை தன்மையில் வாழ்கின்றது எனக் கூற முடியும்' என்றார்.

இக் கருத்தினைத் திருச்சபை தன் வாழ்வில் செயற்படுத்துவதற்காகத் தன் சொத்து சுதந்திரங்கள் யாவற்றையும் விற்று, ஏழைகளுக்கும் தன் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்ய முடியாது தத்தளிப்போர்க்கும் கொடுத்துவ வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

திருச்சபையும் அதன் உறுப்பினரும் அதன் நிறுவனங்களும் இன்றைய சமுதாயம் சீர்குலைந்த நிலைமையை எதிர்த்து வழிகாட்டும் தலைவன்ானக முழு ஈடுபாட்டுடன் இறைவன் மனிதன் மேல் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தாவிடில், அது அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் துணைபுரியும், அவற்றுடன் ஒன்று சேர்ந்துவிடும் - இது நிகழ்ந்தால் திருச்சபை செத்து மடிந்து விடும் என அறிக – என்கிறார் ஜாலியஸ் ஹெரேரே என்னும் தேவியல் அறிஞர்.

இன்று நாம் வாழும் சூழ் நிலையில் திருச்சபை ஆற்ற வேண்டிய முதற் கடமை ஒன்று கூடி ஒருமனப்பட்டு சிந்தனை செய்வதாகும். இன்று நமது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்? யாவை? இறைவன் எவ்வாறு செயலாற்றி வருகிறார் என்று அறிய முற்படுவது அவசியம். அத்துடன் இறைவன் சமுதாயத்திற்கும் மானிட வாழ்க்கைக்கும் கொடுத்துள்ள நீதி, சுயாதீனம், பொறுப்பு, அன்பு, ஆகியவற்றை எத்தகைய திட்டங்களின் வழியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென ஆழ்ந்து சிந்திப்பது திருச்சபையின் கடமையாகும். நாட்டில் ஒருமைப்பாடு நிலவ வேண்டும் - அனைவரும் சாதி, இன, சமய, வேறுபாடின்றி ஒன்றித்து சமாதானமாக வாழ வேண்டுமென்ற ஒரே நோக்குடன் திரு அவை அயராது முயல வேண்டும்.

பதிப்பாசிரியர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் பெற்றெடுத்த ஓரே திரிபுவாதி

## - பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி அழகசுந்தரதேசிகர் -

- பேராயர் எஸ்.ஜெபநேசன்.

1980ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் ஓர் இறையியல் மகாநாடு நடைபெற்றது.இறையியற் கல்வியைத்தொடர்தல் என்பது அம்மகாநாட்டின் பெயர். [Continuing Theological Education]அந்த மகாநாட்டில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவம் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அவருடைய உரை முடிந்த பின்னர் கூட்டத்தில் இருந்த ஒருவர் யாழ்ப்பாண கிறிஸ்தவம் இதுவரை ஒரு திரிபுவாதியையாவது[heretic] உருவாக்கவில்லை என்று குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் பக்தர்கள் தோன்றியிருக்கிறார்கள். சிறந்த அருளுரையாளர்கள் தோன்றியிருக்கின்றார்கள் சிலர் கிறிஸ்தவ சித்தாந்தத்தை அருமையாக விளக்கியுள்ளார்கள், அனால் இதுவரை இங்கு ஒரு திரிபுவாதி தோன்றவில்லை என்றும் குறிப்பிட்டார்.

திரிபுவாதம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு முரணான ஒரு கருத்தை கூறுவது அல்ல முரண்பட்ட சிந்தனைப் போக்கை வளர்ப்பது. சிலர் திரிபுவாதத்தை கிறிஸ்தவ கோட்பாடுகளின் சில அம்சங்களுக்கு அளவுக்கதிகமான அழுத்தம் கொடுத்தல் அல்லது போதியளவு அழுத்தம் கொடுக்காமல் இருத்தல் என்று குறிப்பிடுவர்" (Theological Error) ஆனால் ஒரு திரிபுவாதத்தை ஏற்படுத்தி சலசலப்பை உண்டாக்குவதற்கு வேதாகமத்தில் ஆழ்ந்த பயிற்சியும் சிறந்த மதிநுட்பமும் துணிவும் அவசியமாகும். திரிபுவாதங்கள் அப்போலஸ்தனாகிய பவுலின் காலத்திலேயே தோன்றி விட்டன. நமது விசுவாசப் பிரமாணங்கள் ஒவ்வொன்றும் திரிபுவாதத்தைகளைந் தெறிய உருவாக்கப்பட்டவை யேயாகும். ஆகையினால் திரிபுவாதங்கள் திருச்சபையிலே தோன்றுவது திருச்சபையின் நம்பிக்கைகளை வரையறை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு துணை புரிகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

யாழ்ப்பாணத்திலே மிக நீண்ட காலமாக மிசுஷனரிமார் கற்பித்த கிறிஸ்தவ கோட்பாடுகளையே மக்கள் விசுவாசித்தனர். இன்று சில சில மாற்றங்கள் காணப்படினும் இந்த விசுவாசம் உறுதியாக இருப்பது வெள்ளிடை மலை.

## அழகு சுந்தரம் கிங்ஸ்பரிதேசிகர்

இந்த மரபு ரீதியான கோட்பாடுகளுக்கு மாறான கருத்துக்களை வெளியிட்டு அதற்கான தண்டனைபெற்ற ஓர் கிறிஸ்தவ மதபோதகர் தான் அழகசுந்தரம் கிங்ஸ்பரிதேசிகர். இவர் பிரபல பதிப்பாசிரியர் சி.வை.தாமோதரம் பிள்ளையின் மகன்.சி. வை. தா சென்னையில் வாழ்ந்த பொழுது, அதாவது 1873ம்ஆண்டு ஆவணி மாதம் 8ந் திகதி பிறந்தார். இவருடைய தாயாரின் பெயர் நாகம்மாள். நாகம்மாள் சி. வை. தாவின் இரண்டாவது மனைவி. முதல் மனைவி காலமானதால் சி.வை.தா நாகம்மாளை திருமணம் செய்து கொண்டார். சி.வை தா கிறிஸ்தவராகப் பிறந்தாலும் (தகப்பன் சைரஸ் கிங்ஸ்பெரி: தாய் மேரி டேற்றன்) பல யாழ் அறிஞர்களைப் போல் தென் இந்தியா சென்ற பின்னர் ஆசார சைவராக மாறிவிட்டார்.எனவே மகன் அழகசுந்தரமும் சைவப் பற்றுடையவராகவே வைதீக நெறியில் வளர்க்கப்பட்டார். 1892ம் ஆண்டு தமது 19வது வயதில் சென்னையில் அமெரிக்கன் மிசுஷனரியான பான்கேஸ்ற் என்பருடைய பிரசங்கத்தை கேட்டு கிறிஸ்துவை தமது இரட்சகராக ஏற்றுக் கொண்டார். 1893ம் ஆண்டு வட்டுக்கோட்டை தேவாலயத்தில் வண.பி.எச். றைஸ் போதகரினால் ஞானஸ்நானம் பெற்றார். சி.வை.தாவுக்கு இது கடும் சினத்தை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுசுந்தரம் உடுத்த உடையுடன் வீட்டை விட்டு வெளியேறி, பின்னர் அந்த உடையையும் ஒரு பொதியாகக் கட்டி தந்தையாரிடம் அனுப்பி விட்டார். அழகுசுந்தரம் தன்னுடைய பாட்டனாரின் பெயராகிய கிங்ஸ்பரி என்பதையும் இணைந்து தன்னுடைய ஞானஸ்நான பெயராகிய பிரான்சிஸ் என்பதையும் இணைத்து பிரான்சிஸ் கிங்ஸ்பரி என்ற பெயருடன் தமது வாழ்வைத் தொடர்ந்தார். கிறிஸ்தவ திருச்சபை இவருடைய அறிவைக் கண்டு வியந்தது. பசுமலை இறையியல் கல்லூரியில் கற்ற பிரான்ஸ் கிங்ஜ்பரியை 1898ம் ஆண்டு உதவிக் குருவாகவும், அடுத்த வருடம் குருவாகவும் அமெரிக்க மிஷனரிமார் தென்னிந்திய ஐக்கிய சபை (SIUC) தேவாலயத்தில் இவரை அபிஷேகம் பண்ணினார்கள்.

பிரான்சிஸ் கிங்ஸ்பரியின் வாழ்வு பலவிதமான அனுபவங்களை கொண்டு இருந்தது. தென்றலும், புயலும் மாறி மாறி வீசின. பலவிதமான துறைகளில் அவர் ஈடுபட்டார். ஆனால் எந்தப் பதவியிலும் அவர் நீண்ட காலம் இருக்க வில்லை. அவருடைய சுதந்திர உணர்வு எந்த இடத்திலும் அவரை தொடர்ந்து பணியாற்ற விடவில்லை.

தமது ஒன்பதாவது வயதில் தனது தாயாரை இழந்தார். ஞானஸ்நானத்தினால் சி.வை.தாவின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார். சுயமாகப் படித்து தமது 41வது வயதிலேதான் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியானார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பகுதி நேர ஆசிரியர், சென்னைப் பல்கலைக்கழக அகராதி (Lexicon), துணையாசிரியர், பெங்களூர் இறையியல் கல்லூரி பேராசிரியர், முதலாவது உலகப்போரில் இந்தியப் பட்டாளத்தில் மதகுருவாக மத்திய கிழக்கில் பணி- கொழும்பு பல்கலைக்கழக கல்லூாயில் தமிழ் பேராசியர் போன்ற பல பதவிகளை வகித்தவர்.

இவர் கிறிஸ்தவ மதகுருவாக இருந்த பொழுது சில கிறிஸ்தவ திருத்தாண்டகம் இயற்றியதோடு கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பாடல்களையும் மொழி பெயர்த்தார். நாம் உபயோகிக்கும் பாட்டுப் புஸ்தகத்தில் இவர் எழுதிய பாடல்கள் இரண்டு இருக்கின்றன. (1961ம் ஆண்டு பதிப்பு) When i survey the wondrous cross என்ற ஞானப்பாடல் இவரால் மொழி பெயர்க்கப்பட்டது. ஆனால் இவருடைய நடை மிகவும் கடினமானபடியால் நாம் வே.சந்தியாகு மொழி பெயர்த்த "விந்தை கிறிஸ்து இயேசுராசா" என்ற மொழி பெயர்ப்புப் பாடலையே பாடுகின்றோம்.

பிரான்ஸிஸ் கிங்ஸ்பெரியின் மொழி பெயர்ப்பு பின்வருமாறு.

## திருநேரிசை

1. மாண்பெலாம் உடைய பெம்மான் வதைபடு சிலுவை தன்னை
வீணன்யான் காணுங்காலை வியப்புறுகின்ற துள்ளம்
நீணிலந் தனில்யான் பெற்ற நேரில் ஊதியமும் நட்டம்
பேணிய சருவ மெல்லாம் பித்தென இகழ்கின்றேனே.

2. கடவுளின் புதல்வன் இயேசு சிலுவையை யன்றி மற்றோர்
உடைமையைப் பெரிதென்றெண்ணும் உன்மத்தமெனக்குவேண்டாம்
உடையவன் சிந்து செந்நீர் உளந்தனில் எண்ணுந்தோறும்
புடவியில் மருட்டும் எல்லாப் பொருளையும் துறப்பேன் யானே.

3. என்னிறை தலைமைதாணின் றியல்பொடு துயரும் அன்பும்
மன்னியே கலந்து பாயும் மாட்சியைக் காணாய் நெஞ்சே:
முன்னொரு பொழுதிவ்வாறு கலந்தவோ துயரும் அன்பும்?
பின்னின துண்டோ முள்ளாற் பெறலரும் மௌலிதானே?

4. எண்ணிலா உலகம் யாவும் என் பொருளாயின் இந்த
மண்ணொடு புவனம் எல்லாம் வழங்கினும் கைம்மாறாமோ?
அண்ணல்என் மீது கொண்ட அன்பிது தனக்கென்னாவி
நண்ணும் என் பொருள்வாழ் நாளும் நான்றரல் கடமைதானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமிழ் மக்களுக்கு ஆக்கி அளித்த நூல்கள் பல. இவை பெரும்பாலும் அவருடைய உறவினர்கள் நடாத்திய சாவகச்சேரி "லங்காபிமானி" அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[2]

## இவர் எழுதிய கிறிஸ்தவ திருத்தாண்டகம் பின்வருமாறு.

**எதுகுல காம்போதி**

### திருத்தாண்டகம்

1. அந்தோ: வந் தணுகினது மாலை வேளை:
 அடியெனொடு வைகுதிநீஇ நீங்கேல் என்னை:
அந்தியிருள் செறிந்தென்னைச் சூழா நின்ற
 தாண்டவனே அடியனொடு வைகுவாய் நீ:
சந்ததமும் நம்பினஎன் துணைவர் எல்லாம்
 துணையலராய்இசுகமெல்லாந் தவிருங் காலை
அந்தரித்தார்க் குறுதுணையே, அப்பாஇஎன்னை
 ஆதரிக்க என்னொடு வைகு நீயேஇ

2.கடைக் கண்ணாற் கணப்பொழுது நோக்கு வேண்டேன்
 கடந்தெனை நி போகையிலொர் வாக்கு வேண்டேன்
அடைவுடனீ சின்னாள்வந் திருந்து பின்னர்
 அடியேனைத் தனியிருத்தி அகலல் வேண்டேன்
உடையவனே,உம்மடியார் தம்மோடென்றும்
 உறைவது போல் சுதந்திரனாய்ப் பொறுமையோடும்
இடை மறைவொன் றில்லாமல் எளியேனோடே
 ஏழையேன இகழாது வைகு நீயே.

3. நிகழ்ந்து செலும் ஓரைதொறும் என்னோடப்பா
 நீயிருத்தல் இன்றியமை யாது கண்டேன்:
அகந்தனிற் போராட்ட மெலாம் வெல்வான் உன்றன்
 அருளன்றி வேறொன்றால் ஆவதுண்டோ?
சகந்தனிலே வழிகாட்டி நின்பால் வேறு
 தாமுளரோ? தாங்குவார் யாரும் இல்லை:
ககனமிசை முகில்வந்து மூடு போதும்
 கவினொளி சூழ் போதும் என்பால் வைகு நீயே.

இதுவும் Abide with me என்ற பாடலின் மொழிபெயர்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிபுவாதி:

செந்தமிழையும் புனித வேதாகமத்தையும் ஆழ்ந்து கற்ற பிரான்சிஸ் கிங்ஸ்பரி தமது பிற்காலத்தில் கிறிஸ்தவத்தினுடைய கோட்பாடுகளுக்கு முரணான கருத்துக்களை வெளியிடத்தொடங்கினார். பெங்களூர் இறையியல் கல்லூரியில் கற்ற காலத்தில் இவரின் திரிபுவாத போக்குகளைக் கண்ட நிர்வாகத்தினர் இவரை பதவியில் இருந்து நீக்கும்படி பணித்தனர். எனவே 13 வருட காலம் தாம் கற்பித்த பெங்களூர் இறையியல் கல்லூரியில் இருந்து விலகினார். 1924ம் ஆண்டு " Jesus of Nazareth" என மகுடமிட்டு ஓர் ஆங்கில நூலை வெளியிட்டார்.(3) இந்த நூலில் இயேசுபிரான் வாழ்வின் அதிமுக்கிய நிகழ்ச்சியான உயிர்த்தெழுதல் குறிப்பிடப் படவில்லை. வேதாகம குறிப்புகளைக் கொண்டு இயேசு பிரானின் மரணம் அடக்கம் பண்ணப்படுதல் என்பவற்றையே எழுதினார். இதுவே நூலின் கடைசி அதிகாரம் இதனால் திருச்சபைக்குள் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. அமெரிக்க மிஷனரிமாரும், சுதேச குருமார்களும் திகைப்படைந்தார்கள். தென் இந்திய ஜக்கிய சபையினர் (SIUC)ஒரு விசாரணைக் குழுவை ஏற்படுத்தினார்கள். அவர் மீதான விசாரணை 1925ம் ஆண்டு சென்னை புரசைவாக்கம் SIUC தேவாலயத்தில் நடைபெற்றது.

பிரான்சிஸ் கிங்ஸ்பரியின் நண்பர்கள் அவரை திரிவாத கொள்கைகளை அவர் கைவிட்டு விட்டதாக அறிவிக்கும் படி மன்றாடினார்கள். ஆனால் அவர் அசைந்து கொடுக்கவில்லை. அந்த விசாரணையில் நான்கு மணி நேரம் தமது கொள்கையை விளக்கி சொற்பொழிவாற்றினார். விசாரணையின் முடிவில் அவர் ஒரு திரிபுவாதி என்று கூறப்பட்டது.

1927 ம் ஆண்டு பசுமலை S.I.U.C. ஆலயத்தில் இவருடைய குருப்பட்டம் வாபஸ் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆகையால் அவர் S.I.U.C திருச்சபையினின்றும் நீங்கினார். ஆனால் இங்கிலாந்திலிருந்த ஏகான்மைவாதிகளுக்கு இவருடைய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொள்கைகள் நன்கு பிடித்துக் கொண்டன. ஏகான்மைவாதிகள் இறைவன் ஒருவனே என்றும் மக்கள் பற்பல பெயர்களுடன் இறைவனை வழிபடுகிறார்கள் என்றும், கிஸ்துவும் இறைவனை அடைய ஒரு வழி என்றும், ஆனால் அவர் கடவுளல்லர் என்றும் கூறிவருபவர்கள்.

ஒரு முறை தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த ஒரு ஏகான்மைவாதி சாஸ்திரியாரின் பாடல்களை தாம் பிரசுரிப்பதாகவும், ஆனால் இயேசு நாயகனே! என்று வருகின்ற .இடங்களிலெல்லாம் ஏக நாயகனே என்று போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்பொழுது வேதநாயக சாஸ்திரியார் அந்த ஏகான்மைவாதியிடம் எனது நூல் உம்மிடம் இருப்பதே தவறு, அதை உடனடியாகத் திருப்பி அனுப்பிவிடும் என்று கடிதம் அனுப்பினார்.

கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூாயில் பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி பணியாற்றிய பொழுது ஓர் ஏகான்மைவாத குருவாகவே, அந்த மதகுருமாருக்கு உரிய உடையுடன் இருந்தார். இப்பொழுதும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை அலுவலகத்தில் இவருடைய படம் மதகுரு உடையுடனேயே காணப்படுகின்றது.

இவர் கொழும்பு பல்கழைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக இருந்த போது பல்கழைக்கழக கல்லூரியில் பதிவாளர் நாயகமாக இருந்தவர் திரு.ஏ.ஏம்.கே.குமராசாமி. பிரான்ஸில் கிங்ஸ்பரி திரு.ஏ.எம்.கே.குமாரசுவாமியை ஓர் ஏகான்மைவாதியாக மாற்றுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால் திரு.எ.எம்..கே. குமாரசாமி அசைந்து கொடுக்கவேயில்லை.[4]

பிரான்ஸிஸ் கிங்ஸ்பரியினால் எழுதப்பட்ட பின்வரும் பாடல் அவருடைய ஏகாள்மைவாத்திற்கு சிறந்த ஒரு உதாரணமாகும்.

“நாவரசர், சம்பந்தர். சுந்தரர்.
மாணிக்கவாசகர் முன் பூசை செய்த
நம்பன் ஒரு சிவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவரசர், திருமங்கை, நம்மாழ்வ...
முதலாம் பகவதர்கள் பணி செ...
அச்சுதனே மாலே

"தேவடியார், ஆமோசோ. டேசாயா. மீகாதே
சிகர்சள் உளம் வாழும் யெகோவா மூர்த்தி
...வாடி புகழுடையார் ஏசு குருநாதர்
தம் முக த்தில் இலங்கும் எந்திய என் கடவுள் நீயே."

இதிலே இயேசுகிறிஸ்துவை என் கடவுளே என்று குறிப்பிட்ட போதும். சிவன்,திருமால் போன்ற இந்துக் கடவுளரையும் போற்றத்தவறவில்லை.

இவ்வாறு திரிபுவாதத்தை உருவாக்கி திருச்சபையில் சலசலப்பை ஏற்படுத்திய அழகு சுந்தரம் கிங்ஸ்பெரி தேசிகர் 1941 ஆண்டு தமது 68வது வயதில் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் தமது உலக வாழ்வை நீத்தார்.

(1)Heresy, The wilful and persistent adherence to an error in matters of faith on the part of a baptized person. CD of Christian church. F.L.CROSS

(2) ஏசு வரலாறு கடவுள் வாழ்த்துப்பா அகப்பொருட் குறள். இராமன் கதை. பாண்டவர் கதை. சாந்தரகாசம் மனோன மணியம் (வசன நாடகம்)

பதிப்பிக்கப்படாத கையெழுத்துப்பிரதிகள்
Histoury of Tamil Literature (English)
புத்தர் சரித்திரம்.
சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம்.

(3) Jesus of Nazareth-Francis Kingsbury
Lankabimani Press
Chavakachcheri-1924

(4) A. M. K. cumaraswany's tolerance and courtesy Often gave a mistaken impression.. Mr. Francis kingsbury whom he loved and whose classes on Theology he used to attend believed that he had converted him to Unitarianism but finally discovered that his labours had been wasted"

Kulandran Sabapathy
The Word Men Matters (CISRS)
Page 189.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியாரின் பெருவிழா

"அன்று வாரத்தின் முதல் நாள்... சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தனர். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் "நின்று உங்களுக்கு அமைதி (சமாதனம்) உரித்தாகுக என்று வாழ்த்தினார்... ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டனர்... தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள் மேல் ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை அன்னியாதிருப்பபீர்களோ அவை மன்னிக்கப்படமாட்டா என்றார்.

- (யோவான் 20:19-23)

தூய ஆவியானவர் இயேசு நமக்கு வாக்களித்துச் சென்ற மாபெருங் கொடை, இதனைச் சற்று விரிவாகக் கவனிப்போம்.

(01) தூய ஆவியரின் கொடைகள்

ஏழு கொடைகள் - (ஏசாயா 11:2)

01. ஞானம் — கடவுளின் வழியை அறிதல் அதன் அடிப்படையில் நம் வாழ்விற்கு முக்கியமானது எது முக்கியமற்றது எது என ஆய்ந்து அறிதல்.

02. புத்தி — அனைத்தையும் கடவுள் நோக்குவது போல் நாமும் நோக்குதல் அனைத்து நிகழ்வுகளிலும் இறைவன் செயல்படுவதை உய்த்துணர்தல்.

03. அறிவு — நாம் வாழும் உலகச் சூழ்நிலையை அறிதல் அதன் அடிப்படையில் கடவுளின் அரசை உருவாக்குதல்.

04. விமரிசை — நல்லவற்றை தேர்ந்து தெளிதல் தீயவற்றை இனம் கண்டு அகற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. திடம் — இடர்கள் நேரிடினும் கடவுளின் விருப்பத்தைத் துணிவுடன் நிறைவேற்றுதல்.

06. பக்தி — கடவுள் மீதி பற்றுறுதி கொண்டு அவருக்கு நம்மை முற்றிலும் அர்ப்பணித்தல்

07.தெய்வபயம் — கடவுளின் மகிமையையும், அவருடைய பேரன்பையும் வியந்து போற்றுதல்.

(02) தூய ஆவியின் வரங்கள்

தூய ஆவியார் நமக்குப் பல வரங்களை அளிக்கிறார்.

01. ஞானம் நிறைந்த பேச்சு,

02. அறிவு நிறைந்த பேச்சு

03. விசுவாசம்

04. நோய்களைக் குணமாக்கும் வரம்

05. வல்ல செயல்கள் (அற்புதங்கள்) செய்யும் ஆற்றல்.

06. இறைவாக்கு உரைக்கும் வரம்

07. ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன்

08. பரவசப் பேச்சு

09. அதை விளக்கும் திறன் போன்ற பல வரங்கள்

(1 கொரி 12 : 4 – 11, 27 – 31,
உரோமர் 12 : 6 – 8, எபே 4 : 11)

தூய ஆவியின் வரங்கள் எதற்காக?

- ஆவியின் வரங்கள் நம் அனைவருக்கும் அருளப்படுகின்றன.
- கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையைக் கட்டியெழுப்பவும்,
- இறையரசின் மதிப்பீடுகளின் அடிப்படையில் புதிய சமுதாயத்தை உருவாக்கவும், ஆவியார் வரங்களை நமக்குத் தருகிறார்.
- ஆவியார் அருளும் வரங்களை நாம் தேர்ந்து தெளிய வேண்டும் - ஒருவரே எல்லா வரங்களையும் பெற வேண்டும் என்பதல்ல,
- நாம் பெற்ற வரங்களைப் பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஆவியின் வரங்கள் தனி மனிதனின் புகழுக்காகவும், பெருமைக்காகவும் தரப்படவில்லை, இவை திருச்சபையின் பொது நன்மைக்காகவே, சமுதாயத்தின் வளர்ச்சிக்காவே வழங்கப்பட்டன என்பதை நாம் மனத்திப் கொள்ள வேண்டும்.

(03) தூய ஆவியின் கனிகள்

❖ "நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராக விளங்குவதே என் தந்தைக்கு மகிமை (யோ 15 : 8 ) என்றார். இயேசுபிரான் - "நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்" (லூக் 3 : 9 ) என்று திருமுழுக்கு யோவான் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

❖ தூய ஆவியாரின் கொடைகளையும், வரங்களையும் பெற்று அவற்றைப் பொது நன்மைக்காப் பயன்படுத்தும் போது – நமது வாழ்வு நற்கனி தருகின்ற மரத்திற்கு ஒப்பாகின்றது.

❖ நம்மில் தூய ஆவியார் தம் கனிகளை விளைவிக்கின்றார். இதைப் பற்றி புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார்.

"தேவ ஆவி விளைவிக்கும் பலன்களான 'அன்பு'
மகிழ்ச்சி, அமைதி (சமாதானம்), பொறுமை,
பரிவ, நன்னயம், விசுவாசம், சாந்தம் தன்னடக்கம்"
- (கலாத்தி 5 : 22)

அன்பு – நிறை குறைகளோடு பிறரை ஏற்றுக்கொள்வது சுய நலமின்றி தியாகம் செய்வது

மகிழ்ச்சி - இறை உறவில் ஏற்படும் மகிழ்ச்சி, ஏனெனில் இறைவன் தான் மகிழ்ச்சியின் ஊற்று.

அமைதி – நீதியின் படி வாழ்வதால் ஏற்படுகின்ற சமாதானம் (சமாதானம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை – 1. பிறரோடு உறவாடும் போது நம்மிடம், இருக்க வேண்டிய சகிப்புத் தன்மை, மன்னிக்கும் மனநிலை.

2. மனம் தளராமல் விடா முயற்சியொடு எந்த ஒரு காரியத்தையும் செய்தல்.

பரிவு - இன்முகத்தோடு பிறருக்கு உதவுதல்

நன்னயம் - நாமும் நன்மை நல்கும் மனதுடன் வளர்தல் - பிறரும் நன்மைத் தன்மையில் வளர உதவுதல்.

விசுவாசம் - கடவுள் மீது ஆழ்ந்த பற்றுறுதி கொள்ளல்.

சாந்தம் - கடவுளுடைய விருப்பத்திற்கு அமைந்து இருத்தல் மற்றவர்மட்டில் கரிசனை கொள்ளல்.

தன்னடக்கம் - தன்னுடைய உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தி, நேரிய வழியில் செல்லல்.

புனித பவுலடியார் குறிப்பிடுகின்ற ஆவியின் கனிகளை எந்த அளவுக்கு நாம் கடைப்பிடிக்கின்றோம் என்பதைக் கொண்டு தான், நாம் எத்துணை அளவுக்கு ஆவியில் வாழ்கின்றோம் என்பதை ஆழ்ந்து சிந்தித்து கணித்தல் வேண்டும். வாழ்வில் ஏற்படும் சோதனைகள், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள் இவற்றிற்கு இடையிலும் நாம் ஆவியின் கனிகளை வழங்க வேண்டும். அவையே நமது கிறிஸ்தவ வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

தூய ஆவி பல வரங்களைக் கொடுத்தாலும் அனைத்திலும் தலை சிறந்தவரம் - "அன்பு" என்கிறார் பவுலடியார். "அன்பு எனக்கில்லையேல், எனக்குப் பயன் ஒன்றுமில்லை" (1 கொ 13:3) – ஆம் நமக்கு மட்டுமல்ல திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் யாதொரு பயனுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இறை வேண்டல் !

கத்தியைக் கேட்டேன் சாகசங்கள் புரிய
ஆனால் இறைவனோ, வலிமை
குன்றியவனாய் இருக்க விட்டு விட்டார்
அவரது அருளாற்றலை உணர,

நோயின்றி வாழும் வரம் கேட்டேன்
பணிகள் புரிய – ஆனால் இறைவனோ
பிணியோடு வாழ அனுமதித்தார்
அதனையே பணியாக ஏற்று வாழ

செல்வத்தைக் கேட்டேன் சுகமாய் வாழ
ஆனால் இறைவனோ எளிமையாக
வாழக் கற்றுக் கொள் என்றார்,
அதில் நிறைவைக் காண,

அதிகாரத்தைக் கேட்டேன் பிறரை
ஆண்டு நடத்த - ஆனால் இறைவனோ
அடிபணிய வைத்தார், தாழ்ச்சியிலும்
மனித நேயத்திலும் வளர,

புகழைக் கேட்டேன் பெருமையடைய
ஆனால் இறைவனோ இகழ்ச்சியையும்
எற்கச்செய்தார்- பிறர் படும்
துன்பத்தை உணர,

சோதனையின்றி வாழும் வரம் கேட்டேன்,
ஆனால் இறைவனோ சோனையை
வெல்லும் வரம் அளித்தார் - புனிதத்தில் வளர,

நான் கேட்பதற்கு எதிர்மறையாகக்
கொடுக்கின்றாயே ஏன் இறைவா? என்றேன்
உன் நன்மையையே நான் பெரிதும்
விரும்புகின்றேன் என்றார் இறைவன்

எங்கு தேடினால் உம்மைக் கண்டு
கொள்ள முடியும் இறைவா? என்றேன்
அதற்கு அவர் உன் உள்ளத்தில் - என்றார்

அங்கு என்னை நீ கண்டு கொண்டால்
அனைவரிலும் அனைத்திலும் - அகிலம்
எங்கும் என்னைக் கண்டு கொள்வாய்
என்றார் இறைவன்

- அருட்சகோ-ஆர்-ஜோசப் ஜெயகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையும் விளிம்பு நிலையில் உள்ளோரும்

(யாழ்கிறிஸ்தவ ஒன்றிய கருத்தரங்கில் கருத்துரை வழங்கியவர் அருட் திரு. பென்ஜமின் ஜெயராஜா)

திருமறை கூறும் சொல் விளக்கம் :-

## (1) பழையஏற்பாட்டில் இரு சொற் பிரயோகம் உள்ளது.

அ) காஹால் என்னும் ஏபிரேய சொல் .

சபை லேவி 4:14,16:17 எண், 10:2,சங் 22:22

மக்கள் சபை எரேமியா 26:17

ஆண்டவருடைய சபை உபாகமம் 23:1

கூட்டம் யாத் 16:3,எரே 50:9, எசேக் 23:24

ஆ) எடா என்னும் எபிரேய சொல்,

யாவேயின் ஆணையினால் கட்டப்பட்ட மக்கள் அமைப்பு,

யாத் 12:3, லேவி 8:4, எண் 8:9, எரே 6:18

தீயோரின் கூட்டமாக குறிக்கப்பட்டதுண்டு

சங் 22:16, 86:14 எண் 16:5

சுற்றத்தார் யோபு 16:7

## (2) புதிய ஏற்பாட்டில் எக்ளேசியா,

கூட்டுவிக்கப்பட்ட மக்களின் கூட்டம் அப் நட 19:39, 41சமய சார்பற்றது. ஆனால் கிறிஸ்தவ விளக்கப்படி கடவுள் அழைத்த மக்களின் சபை அல்லது கூட்டம் அப்படியானால் உலகத்தை விட்டு தனியாக பிரிந்திருக்க பொறுக்கி எடுக்கப்பட்ட சிலராக கருத முடியாது. கடவுளால் அழைக்கப்பட்டு ,அவரைச் சந்திக்கவும் அவரது சொற் கேட்டு நடக்கவும் கூட்டப்பட்டதே திருச்சபை என்பது கொண்டிருக்கும் மெய்ப் பொருள். ஆரம்பத்தில் குறித்த இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை வழிபாட்டிற்காக கூடி வந்த யூத சபையைக் குறித்தாலும், பிற்காலத்தில் அவர்கள் கூடி வந்த இடத்தையும் குறித்தது. ஓரிடத்தில் உள்ள கூட்டம் அல்லது சங்கம் மத்18:17, பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் அழைப்புடன் திருச்சபை ஆரம்பம் ஆதி 122, 22:18 அதே போல தகுதியற்றவர் தள்ளப்படுவர் உ-ம் இஸ்ரவேல் ஏசா ஆதி 26:3, 28:13.

கிறிஸ்துவுக்கு கீழ் படிந்து தொடங்கிய பணியை தொடர்ந்து ஆற்றி நற்செய்திப் பணியை முன்னெடுத்து பலரை கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்ப்பது இதில் எவ்வித வேற்றுமையும் இல்லை என்பது கவனத்திற்குரியது. இயேசு கிறிஸ்தவ திருச்சபை ஒன்று உருவாக வேண்டும் என்று எதிர்பார்த்தாரா? என்பதற்கு திட்டமான விடையில்லை. ஆனால் தம் அடியவர் கூட்டம் மக்கள் இயக்கமாக உருவெடுப்பதற்குரிய எண்ணம் அவரிடம் இருந்தது எனப் புரிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் மந்த நிலை இருந்தாலும் பெந்தக் கோஸ்தே நாளின் பின்பு புத்துயிர் பெற்றது. யூத எல்லைகளைத் தாண்டி புறவினத்தாரிடையே சென்று அபரிமித வளர்ச்சியை பெற்றது. புதிய சூழல்களில் எழுந்த பிரச்சனைகளுக்கு பவுலடியாா விளக்கம் அளித்தார். யூதர்கள் கிஸ்தவர்களுக்கு எதிராக புகார் செய்தபடியாலும் ரோம அரசின் சமய அங்கீகாரம் பெறாத நிலையில் ரோம அரசுக்கும் திருச்சபைக்கும் இடையே இழுவை நிலை தோன்றியது. இதன் விளைவாக கிறிஸ்தவர்கள் கொடுந் துன்பத்தை அனுபவிக்க நேரிட்டது. பலர் இரத்தச் சாட்சிகளாக துணிவுடன் முன் வந்தனர். திருச்சபை வரலாற்று ஆசிரியர் இரத்த சாட்சிகளின் இரத்தம், மரணம் இதனைத் தொடர்ந்தும் திருச்சபை வளர்ந்து கொண்டேவந்தது திருச்சபை வளர்ச்சிக்கு வித்தாக அமைந்து வளர்ச்சிக்கு உதவியது என்கிறார்கள்.

இதே வேளையில் திருச்சபைக்குள்ளும் துன்பம் நேரிட்டது. திரிபு கொள்கைகள் எழுந்து வளர்ச்சியைப் பாதித்தது. திருச்சபை பிதாக்கள் இந்நிலைகளைச் சீரமைக்க காப்புரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினர். மன்றங்களைக் கட்டி தீர்வு காண உழைத்தனர். கி.பி.4ம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் அரச மதமாக அங்கீகாரம் ரோம பேரரசன் கான்ஸ்டன்றைன் இனால் பெற்றது.

## (1) விளிம்பு நிலையில் உள்ளோர் :-

உலகம் உருண்டை வடிவமாக இருப்பதனால் ஒரு சமுதாயத்தை வட்டமாக கருதும் போது வட்டத்தில் விளிம்பு நிலையில் காணப்படும் மக்களை விளிம்பு நிலையில் உள்ளோராக கருதலாம். பொதுவாக வட்டத்தின் மையப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அனைத்து வசதியுள்ளோராக உள்ளனர். பொருளாதாரத்தை தான் வசதியாக கருதியுள்ளேன். காரணம் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து வளங்களும் மையப் பகுதியை அண்மித்தோரின் கைகளில் சிக்கியிருந்தன. விளிம்பு நிலையில் உள்ளோராக ஏழைகள், விதவைகள், ஒதுக்கப்பட்ட கூட்டமக்கள் இருந்தனர்.

## (2) திருச்சபையும் மக்களும் :-

வரலாற்றை நோக்கும் போது இந்தியா, இலங்கையில் கி.பி 16ம் நூற்றாண்டிலிருந்தே திருச்சபை இருந்தமைக்கு சான்றுகள் உள்ளன. ஆண்டவரின் சீடன் தோமா நற்செய்தியைக் கொண்டு வந்தார் என்பது பரி தோமா பாரம்பரிய திருச்சபையாரின் ஆழமான நம்பிக்கை. இங்கு ஆரம்ப உறுப்பினர் வசதி படைத்தோராக இருந்தமையால் இருதேசங்களிலும் திருச்சபை வளர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை. 14ம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலணித்துவ அரசுகளினால் தான் இரு தேசங்களிலும் திருச்சபை வளர்ச்சி பெற்றதை அவதானிக்க முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (3) இயேசு நாதரும் விளிம்பு நிலையில் உள்ளோரும் :-

இயேசு நாதரும் பணி ஒதுக்கப்பட்ட கலிலேயாவில் தான் ஆரம்பித்தது. மத் 4:13, மாற் 1:14, லூக் 4:14. இந் நிலை தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டது. ஏசா 9:1,2. இப்படியானவர்கள் சீடராகத் தெரிவு மத் 4:18 – 22, 9:9 யூத சமய வல்லுனர் - ஏழைகள், ஆயக்காரரர், பாவிகள் விதவைகள், கலிலேயரை புறந்தள்ளினார்கள். ஆனால் இவர்களுடன் சஞ்சரித்த ஆண்டவர் தமது ஊழியம் இத்தகையோருக்கே என்றார். மத 9 :12 – 13.

## (4) ஆதி திருச்சபையும் விளிம்பு நிலையில் உள்ளோரும் : -

இத்தகையோர் மீது கரிசனை இருந்தத. அப் நட 6:1 இத்தகையோர் கூடுதல் வல்லமை பெற்றிருந்தனர். அப் நட 6:8, 8:4, 26 – 40 நற்செய்தியில் இத்தகையோர் கூடிய வாஞ்சை அப் நட 14:8 – 10 வசதியான திருச்சபையோர் துன்புறுவோர் மீது கரிசனை பிலி 4:14, 18.

## கீழைத்தேச நாடுகளும் கிறிஸ்தவமும் :-

கீழைத் தேச நாடுகளில் வாழ்ந்த விளிம்பு நிலையில் உள்ளோரே நற்செய்தி பணியாட்களுக்கு செவிசாய்த்தனர். உ- ம் பிரான்சிஸ் சேவியர், நசுக்கப்பட்டோர். உ-ம் முத்துக்குளிப்பில் ஈடுபட்டு அரேபிய மக்களால் கொடுமைப்படுத்தப்பட்டோர், பரவர், கரையோரம் வாழ்ந்தோர் கிறிஸ்தவம் பறங்கி மாாக்கமென்ற நிலையுருவானதால் உயர் சாதியினரிடையே நற்செய்தி பரப்ப றொபேட் நொபிலி முயற்சி. தாழ்ந்த சாதியினருக்கு பண்டார சுவாமி நியமனம் இன்றும் கத்தோலிக்க சபையில் இத்தன்மை நிலைத்து விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தக் கிறிஸ்தவம் ஒல்லாந்தர், பிரித்தானியர் மூலம் இலங்கைக்கு வந்தது. அதிகாரம் வசதி படைத்தோரின் கையில் இருந்தபடியால் நீக்க முடியாத தன்மை.

விளிம்பு நிலையில் உள்ளோர் யார்? என்று இன்றுள்ள பிரச்சனை, இயேசுநாதர் மத் 11:28ல் இளைப்பாறுதல் தர கூவி அழைத்த மக்கள் தான் இத்தகைய மக்களின் மீது கடின உழைப்பு சுமத்தப்பட்டுள்ளது. தாம் சமுதாயத்தில் முக்கிய மற்றவர்கள் என்ற சிந்தனையால் உற்சாகத்துக்குப் பதிலாக சோர்வுக்குள்ளும் தாழ்வு மனப்பான்மைக்குள்ளும் தள்ளப்பட்ட மக்களே பாரம் சுமப்பவர்களாக இயேசு நாதரினால் கூவியழைக்கப்படுகின்றனர். இத்தகையோரே இயேசு நாதரைத் தேடி நாடினார்கள். இவர்களின் சரீரத் தேவைகளையும் ஆன்மீகத் தேடுதலையும் அவர் நிறைவாக்கினார்.

இன்று நம் மத்தியில் சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டோர் ஏராளம் உள்ளனர். போராட்ட சூழ்நிலையில் பலர் பாதிக்கப்படுவது மட்டுமல்ல அத்தகையோருக்கு கிறிஸ்தவர்களாக, திருச்சபையாக நாம் எவ்வகையான பணி முறைகளைக் கையாளப் போகின்றோம் என்பதுவும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். இவர்களைச் சரியாக இனம் கண்டு கொள்வதும் பாரிய பொறுப்பாகும். பொதுவாக திருச்சபையானது நல்ல சமாரியன் பணியினைச் செய்தால் மட்டும் போதுமா? இதற்கான உள்ளீடுகளை எங்கிருந்து பெறுவது என்பதெல்லாம் கருத்திற்கொள்ள வேண்டியவை.

நாங்களே எவ்வித வெளிநாடுகளில் இருந்தும் பெற்றுக் கொண்டதைக் கொடுத்தல் சரியான படி எம்மை இத்தகையோருடன் முழுமையாக ஈடுபட உதவாது நாமே இத்தகையோருடன் ஒன்று பட்டு இணைந்து செயல்படவேண்டு மாயின் எமக்குள்ளவற்றையே கொடுத்து உதவ வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவர் அம்பேத்கார் இந்தியாவின் தலித் மக்களின் தலைவர் அவர் கூறுவது என்னவெனில் இவ்வகையான மக்களுக்கு கல்வி கொடுக்கும் போது அறிவின் வளர்ச்சியால் விழிப்புணர்வு பெற்று தம்மை சரியான படி இனம் கண்டு செயல்படத் தொடங்குவார்கள் என்பதுவே. மேற்கத்தேய நற்செய்திப் பணியாட்களும் இவ்வகைப் பணியை செய்துள்ளார்கள் என்பதையும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வகையான மக்களிடையே ஐக்கியத்தை உருவாக்கும் செயல்பாடுகளைச் செய்தால் அனைவருமாகச் சேர்ந்து (கூட்டு முயற்சி) பண்ணை, வாசிகசாலை போன்றவற்றை அமைத்து செயல்படுதல். இதன் மூலம் சேவை மனப்பான்மையும் தியாக உணர்வினையும் பெற்று வாழ்வர் நம்பிக்கையூட்டுதல் மிக அவசியம். இதற்காக உழைப்பவர்கள் தத்தமது வாழ்வில் சாட்சியுள்ளவர்களாக வாழும் போது, அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் புத்துணர்வு பெற்று இணைந்து வாழ முற்படுவர். செயற்படத் தூண்டப்படுவர் மற்றவர்களில் தங்கி வாழாமல் சொந்தக் காலில் நிற்கும் படி ஊக்குவிக்க வேண்டும். இறுதியில் ஒரு சீனப் பழ மொழியைக் கூறி நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

**"மீன் வேண்டும் என கேட்போருக்கு மீனைக் கொடுக்காமல்**
**மீனைப் பிடிப்பது எப்படி என்று கற்றுக் கொடுக்க வேண்டும்."**

இதனால் அவர்கள் தத்தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து நிறைவாக வாழ முற்படுவர். மற்றவர்களில் தங்கி வாழ்வதை தவிர்த்துக் கொள்வர். இப்படியாகச் செயல்படுவது இறையரசின் நிறைவை நோக்கிய தொடர் பயணத்தை நிறைவுற வழி வகுக்கும். இதுவே இன்றைய கிறிஸ்தவர்களின் முக்கிய பங்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை வசப்படுத்தும் தொலைக்காட்சித் தொடர்கள்

இன்று இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலும் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் கூடுதலான மக்களால் விரும்பிப் பார்க்கப்படுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி எதுவெனக் கேட்டால் அது தொலைக்காட்சி தொடர்களும். மக்களை தம் வசப்படுத்தி வைத்திருக்கும் (கிரிக்கட்) துடுப்பாட்டத் தொடர்புகளோடு தொலைக்காட்சித் தொடர்களும் இப்போது இணைந்து விட்டது. தமிழகத்திலே இத் தொடர்கள் பற்றி மதிப்பீடு செய்பவர்கள் "பெரும்பாலான இல்லத்தரசிகளை இத்தொடர்கள் கட்டி வைத்திருக்கின்றன". என்று சொல்கின்றது. சமையல் செய்ய வேண்டிய மதிய வேளைகளிலும் இல்லத்தரசிகள் வேலை செய்ய வேண்டிய வேளைகளிலும் 'சுவை'மிகு தொடர்கள் நடைபெறுவதால் - இல்லத்தரசிகளால் சமையலில் கூட 'சுவை' பேண முடிவதில்லை என பல கணவன்மார் குறைபட்டுக் கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் உணவின் 'சுவை' யை விட தொடர்களின் 'சுவை' தான் பெண்களுக்கு பெரிதாகத் தெரிகின்றது. என்கின்றார்கள் ஆய்வாளர்கள்.

இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் போன்றோரும் பிரபல தயாரிப்பு நிறுவனமான ஏ.வி.எம் போன்ற தயாரிப்பு நிறுவனங்களும் இப்போது படம் பண்ணுவதை அக்கறை பண்ணாமல் (மெகா) நீண்ட தொடர்புகளை பண்ணுவதிலேயே அக்கறை கொள்கின்றனர். இதற்கு உதாரணங்களாக 'சிந்து பைரவி' என்ற அருமையான திரைப்படத்தை தந்த கே.பாலச்சந்தர் 'சஹானா' என்கின்ற நீண்ட தொடரை சிந்துபைரவியின் இரண்டாம் பாகம் எனக்குறிப்பிட்டு ஜெயா டி.வி யில் ஒலிபரப்புச் செய்து வருவதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம். 'சிந்து பைரவி' என்பது ஒரு அருமையான திரைப்படம் மறுப்பதற்கில்லை எனினும் ''சஹானா''வை அதனுடன் ஒப்பிட முடியாது ஏனெனில் அது வியாபார நோக்கத்திற்காக தயாரிக்கப்படுகிறது. சிந்து பைரவியில் பைரவிக்கு நடித்த நடிகையை தவிர மற்ற சகல நடிகர்களும் வேறு நடிகர்களாகவே உள்ளனர். சிந்து பைரவியில் தனது அருமையான நடிப்பினால் ரசிகர்களைக் கவர்ந்த சிவகுமாருக்குப் பதிலாக நகைச்சுவை நடிகர் வை.ஜி மகேந்திரன் நடிப்பது சகிக்கமுடியாதுள்ளது. வியாபார நோக்கத்திற்காக கதையை இழுத்துக்கொண்டு போவதும் ஏற்றுக் கொள்ளமுடியாதுள்ளது. சிந்து பைரவியின் கதாம்சம் சஹானாவில் துளி கூட இல்லை. எனினும் ஒரு சிறிய விடயத்தை வைத்துக் கொண்டு மக்களை உணர்ச்சி வசப்படுத்திக்கொண்டு இத் தொடர் வெற்றி நடை (யதார்த்தளவில் அல்ல வியாபார நோக்கில்) போடுகிறது.

திரைப்படங்களில் நடிக்கும் பல நடிகர்கள் இப்போது தொலைக்காட்சித் தொடர்களில் இறங்கியுள்ளனர்.ஏனெனில் திரைப்படங்களில் வெற்றி, தோல்வி நடிகர்களை பாதிப்பது போல் தொலைக்காட்சித் தொடர்களின் வெற்றி தோல்விகள் நடிகர்களைப் பாதிப்பதில்லை. தொடர்கள் நல்லதோ கெட்டதோ நடிகர்கள் தமது சம்பளத்தை வாங்கிக் கொண்டு தம் பாட்டிலேயே போய் விடுகின்றனர்.

மக்கள் தம்மையும் அறியாமல் இத் தொடர்களின் முன்பாக மதிமயங்கிக்கிடக்கின்றனர். சில தொடர்கள் மூன்று நான்கு வருடங்களாக 'இழுத்துக்கொண்டு' போகும். ஆனால் மக்கள் பார்க்கிறார்கள். அரைமணி நேர காட்சிகளில் கால்மணி நேரம் விளம்பரத்துக்குசென்று விடும். மிகுதிக் கால்மணி நேரத்திற்கு தான் கதை நகரும். பழைய நடிகர் ஜெமினி கணேசன் அண்மையில் ஒரு தொடரில் நடித்திருந்தார். 'கனாக்கண்டேன் தோழி' என்கிற அத்தோடரில் அவர் ஒரு முக்கிய பாத்திரம் ஏற்றிருந்தார். இடையில் அவருக்கு உண்மையிலேயே சுகவீனம் வந்து விட்டது. அவருக்கு சுகவீனம் மாறும் வரை தொடரை வைத்து இழுத்துப் பார்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரது தள்ளாமையில் இருந்து அவர் விடுபட முடியவில்லை. பின்பு கதையே மாறி விட நேர்ந்தது. தொடரில் அவரது முக்கிய பாத்திரத்தை மரணிக்க வைத்து அவரது பாத்திரத்தை முடித்து வைத்தார்கள்.

திரைப்படங்களில் உள்ள ஆபாசக் காட்சிகள், விரசக்காட்சிகள் மக்களை ஏய்க்கும் சண்டைக் காட்சிகள் தொலைக்காட்சித்தொடர்களில் இல்லை என்பது ஆரோக்கியமான செய்தியாக இருந்தாலும் இத் தொடர்களால் மக்கள் தமது பொன்னான நேரத்தை இழுக்கின்றனர் என்பதுதான் துன்பியலாக உள்ளது. குறிப்பாக ஊழியக்காரரான நாங்கள் முன்பு யாராவது வீட்டுக்கு சென்றால் எம்மை பெரிதாக வரவேற்பது சபையாரது பண்பு. இப்போது சில இடங்களில் இச் செயல் மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.சில இடங்களுக்கு நாம் செல்லும் போது "நாடகம் பார்க்கிறோம் போதகரையா பிறகு சந்திப்போம்" போன்ற பதில்களையும் நாம் கேட்க வேண்டியுள்ளது. சிலர் தொடர்களைப் பார்த்து பார்த்து எம்முடன் ஏனோ தானோ என்று கதைக்கின்றனர். சிலர் நுனிக்கதிரையில் இருந்துகொண்டு இந்நேரத்தில் எமது வரவினை தாம் விரும்பவிலிலை என்பதை காட்டாமல் காட்டுகின்றனர். இது ஒரு உதாரணம் மட்டுமே. "ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்ற ரீதியில் மக்களின் வந்தாரை வரவேற்கும் பண்பு போன்ற பல பண்புகளை தொலைக்காட்சித் தொடர்கள் மழுங்கடித்துள்ளது என்பதே உண்மை.

ஏ.வி.எம். மின் "ரோஜா", "கனாக்கண்டேன் தோழி", கே.பாலச்சந்தரின் "அண்ணி" போன்ற நல்ல தொடர்கள் இருப்பினும் - 'வீட்டுக்கு வீடு லூட்டி, கே.பாலச்சந்தரின் "சஹானா" போன்ற தொடர்கள் உப்புச்சப்பற்ற தொடர்களே எனினும் மக்கள் மனதில் இவை சுவை மிக்கதாக உள்ளதற்கு காரணம் - இவ்வாறான தொடர்கள் கதையை நம்புவதை விட மக்களது உணர்ச்சி வசப்படும் தன்மையை நம்பி எடுக்கப்படுவதே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேரம் பொன்னானது நேரத்தை வீணாக்காதீர்கள் "என்கின்ற வாசகம் எல்லாம் இனி பிரயோசனப்படாதோ என்கின்ற அளவுக்கு மக்கள் இத் தொடர்களின் முன்பு மதியமயங்கி கிடக்கிறார்கள். பிள்ளை சோதனைக்குப் படித்துக் கொண்டிருக்கும் போது தாய் தொலைக்காட்சித் தொடரின் முன்பு தன்னை ஈடுபடுத்தியிருக்கும் தன்மை பிள்ளைகள் மேலுள்ள பற்றினைக் கூட "தொடர்கள்" ஈர்ந்து விட்டனவோ என எண்ணத்தோன்றுகின்றது. கல்வி கற்கும் பிள்ளைகள் வீட்டில் இருப்பினும் தொலைக்காட்சியின் முன்பு மதி மயங்கிக் கிடக்கும் பெண்கள் குல மாணிக்கங்கள் எம் மகத்திலும் உள்ளனர். ஆபாசமான, விரசமான காட்சிகள் கொண்ட சினிமா மோகத்திலிருந்து தொலைக்காட்சித் தொடர்கள் மக்களை விடுவித்திருக்கின்றது என்கிற ஒரு விடயம் இருப்பினும் பல தீமைகள் இருக்கத்தான் செய்கின்றது. பிள்ளைகளுக்கு "படம் பார்ப்பதை விட இவ்வாறான தொடர்களைப் பாருங்கள்" என்ற அறிவுரை (?) கூறும் பெற்றோர் எம்மகத்தில் உண்டு. தொலைக் காட்சித் தொடர்கள் தொலைக்காட்சியை தொல்லைக்காட்சியாக மாற்றியிருப்பது என்னவோ உண்மைதான். நேரமில்லை, நேரமில்லை என்று ஆரோக்யமான வேலைகளைச் செய்து வந்து கொண்டிருந்த எம்மவர்கள் இப்போது நேரமில்லை, நேரமில்லை என்று தொல்லைத் தொடர்களின் முன்பு மதி மயங்கிக் கிடப்பது வேதனைக்குரியது. இத் தொடர்களால் கணவன் - மனைவிக்கிடையில் பிரச்சனைகள் வெடிக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அக்கறை இன்றி வீட்டு வேலைகளை ஒழுங்கில்லாமல் செய்வது, நேரத்திற்கு உணவு சமைக்காமை, சுவையின்றி உணவு சமைப்பது போன்ற செயல்களால் வீடுகளில் அமைதி குலைகிறது. நேரம் வீணாவது வந்தாரை வரவேற்பது போன்ற நற்பண்புகளை இழப்பது போன்ற தவறான பாதைகள் தமிழர் சமுதாயத்தை அகல பாதாளத்திற்குள் கொன்டு சென்று விடும். எதற்கும் ஒரு அளவு கோலை வைத்துக் கொள்வது நல்லது. இரவில் நேரம் கடந்து படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிரு தொடர்புகளை பார்ப்பது பிழையில்லை. மாறாக நாள் முழுவதும் தொடர்களுக்கு முன்பு மதிமயங்கி இருப்பது கண், உடல், உள்ளம் போன்ற ஒன்றுக்குமே ஏற்றதில்லை ஏமாறுபவர்கள் உள்ளவரை, ஏமாற்றுபவர்கள் ஏமாற்றிக் கொண்டே இருப்பார்கள். வெறும் உணர்ச்சிகளுக்கே நாம் அடிமைப்பட்டுக் கொண்டிருந்தால் சிந்தனைகள் குறுகியதாகவே இருக்கும் எனவே இயன்ற வரை பொன்னான நேரத்தை வீணாக்காமல் எமது நற்பண்புகளைப் பாதுகாப்போம். என்ன செயல்களைச் செய்தாலும் வரையறையுடன் செய்து பழகுவோம்.

- சிந்திப்போம் செயற்படுவோம்-

வண. பி. தேவதாஸ்

## அருட் குறள்

நீரின்றி மீன் சிறிது வாழம் : ஏசு : நீரின்றி
நான் சிறிதும் வாழ்தல் அரிது

- (ஏசா 50:2)

அஞ்சிவரும் பாவியருக் கஞ்சலருள் மீட்பனை
வஞ்சமிலா நெஞ்சமதில் வாழ்த்து

- (யோவா 3:18)

தாழ்ந்தாரைத் தூக்கித் தகுந்தாராய் ஆக்கவே
வாழ்ந்தானை நெஞ்சமே வாழ்த்து

- (மத் 8:17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஓரே பொதுவான தூயதிருச்சபை உண்டென விசுவாசிக்கிறேன்"

இன்று, பல நாடுகளில் பெரும்பாலான சபைகள், தங்கள் நடுவில் நிலவிய வெறுப்புக்களையும், போட்டிகளையும் புறம்பே அகற்றிக் கூட்டாக ஒன்றித்து வாழவும் செயல்படவும் கற்றுக் கொண்டன. நிறைவும் வெளிப்படையுமான ஒன்றிப்பிற்குள் வர, அவர்கள் தம்மை ஒப்புக்கொடுக்கும் போது, ஒன்றிப்பின் இயல்பைப் பற்றி அவர்கள் தம் விருப்பத்தைத் தெருவிக்கவேண்டுமென எதிர்பாக்கப்படுகின்றது.

உரோமன் கத்தேலிக்க, வைதீகக் கிறிஸ்தவர்கள், தத்தம் சபைகளே கிறிஸ்துவின் உண்மையான ஓரே திருச்சபையுடன் ஒன்றியுள்ளது எனப் பாரம்பரியமாகக் கருதி வந்தனர். இதன்விளைவாக மற்றக்கிறிஸ்தவர்கள் அனைவரும் இச்சபைகளிலிருந்து பிரிந்து தனிமையாக செயற்படத் துவங்கினர். இதைக் கவனித்த உரோம, வைதீக திருச்சபைகள் பிரிந்து இயங்கி வரும் சபைகள் உண்மையான திருச்சபைக்குத் திரும்பி வர வேண்டியது அவர்கள் கடமை என்றனர். ஏனெனில், பிரிந்த சபைகள் உண்மையான சபைகள் அல்ல என்பதே அவர்களின் கருத்தாகும்.

இந்தக் கருத்தையே இன்று வைதீக சபைக் கொண்டுள்ளது. இருந்தும், இச்சபை அனைத்துலகத் திருச்சபைகளின் மாமன்றத்தின் செயற்திட்டக் குழுமங்களில் தனது சபையார் முழுமையாக ஈடுபடுவதை தடுக்கவில்லை. இவ்வாறு இவர்கள் காட்டிவரும் பொறுதியற்ற தன்மை, இறைவனின் திருவுளத்தில் ஒரேஒரு திருச்சபைதான் உண்டு என்ற உண்மைக்கு, அளிக்கப்படும் உறுதியான சாட்சி, நாம் வெளிப்படையாக வெவ்வேறு வழிகளை பின்பற்றி ஒருவரோடு ஒருவர் அதிகப்படியான தொடர்பு வைக்காதிருந்தும்- "ஆவிக்குள்"அல்லது "கண்ணால் காணமுடியாத" வகையில் நாம் ஒன்றித்திருக்கின்றோம் எனக் கூறும் மாற்றுக்கொள்கையை இச் சபை புறக்கணித்து விட்டது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக் கிளைகள் இயங்குவதையும் இச் சபை ஏற்க மறுக்கிறது. ஏனெனில் இத்தகைய பிரிவுகள் புதிய ஏற்பாட்டுப் போதனையில் காணப்படவில்லை என்பதே காரணமாகும்.

பலவிதமான சின்னங்கள் கொண்ட சமயத்தை வழங்கும் இக் கிளைச் சபைகள் வாடிக்கைக்காரருக்காகத் தமக்குள்ளே போட்டியிடுவதால் சபையார் தாம் விரும்பிய சபையை நாடிப்போகத் தூண்டப்படுகின்றனர். இதன் விளைவாக அனேகர் வேறு இடங்களுக்கு மாறிப் போகும் போது, தமது சபைத் தொடர்பையும், வேறு சபைக்கிளைக்கு மாற்றுகின்றனர். இத்தகைய வழக்கத்தை நமது நாட்டின் பட்டணங்களிலும் அதிகமாகக் காணலாம்.

திருச்சபை ஒன்றிப்பைப் பற்றி வைதீக சபை கொண்டுள்ள கொள்கை-தாம் கொண்டுள்ள அதே விசுவாசத்தையும் ஒழுங்கு முறைகளையும் ஏனைய சபைக்குழுக்களும் ஏற்க வேண்டும் என்பதும் - உலகம் முழுவதும், கிறிஸ்தவர்கள் தன்னாட்சி செலுத்தும் வைதீக சபைகளின் உறுப்பினர் ஆக வேண்டும் என்பதே. கிறிஸ்தவர்கள் நற்கருணைத் திருவிருந்தில் ஒன்று கூடி கலந்து கொள்ளும் போது திருச்சபையின் நிறைவான ஒருமைப்பாடு இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

இச்சபைகள்தான் மற்றச் சபைகளுடன் ஒன்றுபட்டு இருக்கவும், காலத்திற்குக் காலம் அனைத்துச் சபை இயக்க மன்றத்தில் ஒன்றித்து இயங்கவும் முடியும் என்பதே அவர்கள் கருத்தாகும்.

உரோமன் கத்தோலிக்க சபைதான் கிறிஸ்துவின் உண்மையான ஒரே திருச்சபையுடன் ஒன்றுபட்டுள்ளதென்று தக்க ஆதாரங்களுடன் இரண்டாம் வத்திக்கன் சங்கத்தில் உரைக்கப்பட்டது. கத்தோலலிக்க திருச்சபை சபை ஒன்றிப்பைப் பற்றிக்கொண்டுள்ள குறிக்கோள் - கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒரே அடிப்படைவிசுவாசத்திலும் வாழ்விலும், சபை ஒழுங்கு முறையிலும் பங்கு கொள்ள வேண்டும். உள்ளூர்பேராயரின் ஆட்சியின் கீழ் அமைந்தவர்களாயிருத்தல் வேண்டும் என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதீக சபை பாப்பரசருடன் கொண்டிருந்த பூரண ஐக்கியத்திற்குள் இருந்து பிரிந்து போயினும், இச்சபைகளுக்கு "திருச்சபை" என்ற பெயரைவழங்க உரோமன் கத்தோலிக்க சபை தயங்கவில்லை. ஏனைய கிறிஸ்தவ திருச்சபைகளும் சபை வாழ்விற்கு உயிர்ப்பும் அசியமுமான திருமுழுக்கு, திருமறை, விசுவாச அறிக்கைகள், திருவிருந்து, திருநிலைப்படுத்தப்பட்ட குருத்துவத்திருப்பணி ஆகிய முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளதாலும் அவற்றையும் திருச்சபைகள் என கருத கத்தோலிக்க சபை தயங்கவில்லை.

இரண்டாம் வத்திகக்கன் சங்கக்கூட்டத்தில் கிறிஸ்துவின் ஒரே உண்மையான திருச்சபை - உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைதான் என்று குறிப்பிட்ட முறையில் கூறப் பேராயர்கள் மறுத்தனர். இதற்குதப் பதிலாக - இந்த உண்மையான திருச்சபை, உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது' எனக் குறிப்பிட்டனர். இதனால் மற்ற சபைகளிலும் உண்மையான திருச்சபை பூரணப்படாத நிலையில் .இயங்கிக் கொண்டிருக்கிறது. என்பது பொருத்தமாகும்.

கிறிஸ்தவ உலகைச் சீர்குலைத்த சபைப்பிரிவினைகள் திருச்சபைக்குள்ளேயே நிலவுகின்றன, எனப் பெரும்பாலான சபைகள் நம்புகின்றன. ஆகவே வைதீக கத்தோலிக்க சபைகளும், மற்ற சபைகளும் ஒருவரை ஒருவர் "சபைகள" எனக்கருத ஆயத்தமாயுள்ளன. இவையாவும் ஒரு வகையில் கிறிஸ்தவ சபைப் பிரிவால் பாதிக்கப்பட்டன .

ஒரு வகையில் அனைத்துச் சபைகளும், தங்கள் சபைகளுக்கிடையே,உண்மையாக ஒன்றித்த சபையாக இருக்க வேண்டுமென எதிர்நோக்குகின்றன.எனவே திருச்சபை ஒன்றிப்பைப் பற்றிய பயனுள்ள கருத்தை கொண்டவர்களாக சபைகள் இருத்தல் வேண்டுமென அறிக.கிறிஸ்தவ ஐக்கியம் எங்கள் ஐக்கியமல்ல அது கடவுளுடையது.இருந்தும் அவரின் திருவுளத்திற்கேற்ப நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படாவிடின், நாம் வாழும் பகுதியில் அதனைக் காட்டுணர முடியாது எனத் தெளிதல் வேண்டும்.

நாம் ஒரே விசுவாசத்தை அறிக்கை செய்யும் போது, ஒரே நற்செய்தியை அறிவிக்கும் போது ஒரே திருமுழுக்கிற்கு எம்மை ஒப்புக்கொடுக்கும் போது, ஒரே நற்கருணைத் திருவிருந்தில் கலந்து கொள்ளும் போது- தூய ஆவியாரின் வல்லமையினால் எங்கள் வட்டாரங்களிலுள்ள மக்களிடம் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்ந்து, அவர்களுக்குச் சேவை செய்யும் போது தான் இறைவனின் ஒருமைப்பாடு வெளிப்படையாகக் காணப்படும். சபையின் ஒருமைப்பாடு வெளிப்படையாகத் தெரிய வேண்டும் - அப்போது தான் கிறிஸ்தவர்கள் அல்லாதோர் மனுமக்களை ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரிக்கும் தடங்கல்களாகிய – வகுப்புவாதம், இன வேற்றுவை, பால் வேற்றுமை, சொத்துரிமை அதிகாரம் ஆகியவை கிறிஸ்தவ சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காண்பார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலாவது, நிரந்தரமாக வேறுபட்ட சபைகளுக்கு இடமில்லை என்பதை அறிக.

பூரணமும் நிறைவானதுமான ஐக்கியம் இந்த வாழ்வில் பெறக்கூடியதொன்றல்ல. நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியடைய இடைவிடாமல் வளரவேண்டும். இறையட்சியையும் அவர் அரசையும் நாம் முழுவதுமாக அறிந்துணரும் போதுதான், முழு நிறைவு நமக்குரியதாகும். இந்தக் கருத்தில், ஐக்கியம் ஒரு வழிமுறை – கிறிஸ்தவர்கள் அதை நோக்கி வளர்த்து கொண்டிருக்கின்றனர்.

நாம் சுதந்தரித்த முக்கிய மரபுவழியை மறுதலிக்காமல், மற்ற இடங்களில் இருக்கும் கிறிஸ்தவர்களுடன் கொள்ளும் தொடர்பை அறுத்து விடாமல் இருக்க சபையின் குருத்துவ ஊழியத்தையும் அங்கத்துவத்தையும் நாம் முறைப்படி அமைப்பது முக்கியம். திருச்சபை எல்லாச் சந்ததிகளுக்கும் - அனைத்துத் தேசி எல்லைகளுக்கும் அப்பால் கடந்து நிற்கிறது.

இது தான் “அனைத்துலகத் திருச்சபை” என்பதின் கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHY ARE YOU A MAN OF HOPE?

Because I believe that God is born a new each morning,
because I believe that he is creating the world at this very moment.
He did not create it at a distant and long for gotten moment in time
It is happening now we must there fore be ready to expect
the Unexpected from god.
The ways of providence are by nature Surprising.
We are not prisoners of determinism nor of the Sombre
prognostications of Sociologists.
God is here, near us Unforeseeable and loving.
I am a man of hope, not for human resons nor from any
natural optimism.
But because I believe the Holy Spirit is at work in the Church and
in the world, even where his name remains Unheard.
Iam an optimist because I believe the Holy Spirit is the Spirit of Creation.
To those Who welcome him he gives each day fresh liberty and
renewed joy and trust.
The long history of the church is filled with the wonders of
the Holy Spirit.
Think only of the prophets and Saints Who, in times of darkness,
have discovered a spring of grace and shed beams of light
on our path. I believe in the Surprises of the Holy Spirt.
Pope John XXIII came as a surprise, and the Council, too.
They were the last things we expected.
who would dare to say that the love and imagination of
God were exhavsted?
To hope is a duty, not a luxury,
To hope is not to dream, but to turn dreams into reality
Happy are those who dream dreams and are ready to pay
the price to make them Come true.

(L.J.CARDINAL SUENENS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE PRIORITY OF THE HOLY SPIRIT AS THE LIFE - PRINCIPLE OF THE CHURCH

**Without the Holy Spirit, God is far away,**
**Christ stays in the past,**
**the Gospel is a dead letter,**
**the Church is simply an organization,**
**authority a matter of domination,**
**mission a matter of propaganda,**
**the liturgy no more than an evocation,**
**Christian living a slave morality.**

**But in the Holy Spirit**
**the cosmos is resurrected and groups with**
**the birth pangs of the kingdom,**
**the risen Christ is there,**
**the Gospel is the power of life,**
**the Church shows forth life of the Trinity,**
**authority is a liberaling service,**
**mission is a Pentecost,**
**the liturgy is both memorial and anticipation**
**human action is deified.**

**metropolitan Iganatios of Latakia (delivered at the meeting of the world council of Churches at uppsala in 1968)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பப்பா ! எத்தனை சபைகள் !

இந்தியன் பெந்தேகொஸ்து, சிலோன் பெந்தேகொஸ்து சபைகள், யெகோவாவின் சாட்சிகள், யெகோவா நீசி சபை, சி.எஸ்.ஐ.திருச்சபை, சி.என்.ஐ.திருச்சபை, கிறிஸ்து சபை பெனிவெல் சபை. அசம்பளி ஆப் கார்ட் சபை, யூனைடெட் ரிபோர்ட் திருச்சபை, மொராவியன் சபை, தமிழ் பாப்திஸ்ட சபை, ஆர்காட் லூத்தரன் சபை, தமிழ் இவான்ஞ்செலிக்கல் லூத்தரன் சபை, இந்திய இவான்ஞ்செலிக்கல் லூத்தரன் சபை, இவான்ஞ்செலிக்கல் சேர்ச் ஆம் இந்தியா, லியே – வொன்ஞ் செலிஸ்ட சபை, தூய யோவான் சுவிசேஷ சபை, சாரோன் பெந்தேகொஸ்து சபை, எழாம் நாள் திருவருகைச் சபை, புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்துவ சபை, லாட்வியன் இவான்ஞ்சலிக்கல் லுத்தரன் சபை, மெட்ராஸ் பாப்டிஸ்ட் சேர்ச் - சல்வேஷன் ஆர்மி சபை, பாரானாதா சேர்ச் - சிலோவாம் சேர்ச் - ஓரேப் சேர்ச், அப்போஸ்தலிக்க சேர்ச், கிறிஸ்டோபர் சேர்ச் - ஆல் சேமின்ட் சேர்ச், எஸ்.பி.ஜி சேர்ச், சியோன் சேர்ச், ரிவைவன் கிஸ்டியன் சேர்ச்,கிருபானந்த சபை, பெராக்கா சபை, - ஜெப ஆலயம், நல்லாயன் சபை, மகிமையின் தேவசபை, மெதடிஸ்தசபை, பெனியல் சபை, யாழ் எபனேசர் சபை, யாழ் கானான் சபை, அப்போஸ்தலிக்க சபை, இவை போன்ற இன்னும் எத்தனையோ சபைகள் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் - குறிப்பாக யாழ் குடாநாட்டிலும் இயங்கி வருகின்றன.

ஆண்டு தோறும் புதுப்புது சபைகள் தோன்றி வருகின்றன. கிறிஸ்துவ சபை ஒன்றிப்புகானல் நீராகவே காட்சியளிக்கின்றது. கிறிஸ்தவ சபைகள் ஒன்றாக இணையாவிட்டாலும் தங்களிடையே நல்லிணக்கத்தையாவது வளர்த்துக் கொள்ளலாம் அல்லவா "அந்நாள் எந்நாளோ"

**"தந்தையே, நீர்என்னுள்ளும் நான் உம்முள்ளும்**
**இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக"**

**(யோனான் 17:21)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளமேகப் புலவரின் இரு பாக்கனிகளைச் சுவைத்துப் பாருங்கள்.

**பூனைக்கு ஆறுகால் : -**

பூனைக்கு எத்தனை கால் ? - பறவைக்கு எத்தனை கால்? ஆனைக்கு எத்தனை கால் ? - இவை தெரியாதா எங்களுக்கு என்று நீங்கள் நினைக்கலாம் - காளமேகப் புலவர் சொல்லதைக் கவனியுங்கள்.

பூனைக்கு ஆறுகால், பறவைக்கு ஒன்பது கால், ஆனைக்குப் பதினேழு கால், இப்படி ஒருவர் சொன்னால் அவருக்கு மூளைக் கோளாறு என்றே கூறுவோம் அல்லவா?

ஆனால் இதைக் கூறுபவர் ஒரு சாதாரண மனிதன் அல்ல - அவர் தான் காளமேகப் புலவர், அவர் தொடர்ந்து கூறுவதைக் கேளுங்கள் - தாமரைப் பூக்குள்ளே நீலப் பூக்கள் பூத்தனவாம் - அதனைத்தான் கண்டாரம், ஆனால் வேறெவரும் சொல்லக் கேட்டதில்லையாம், என்ன ஆச்சரியம் வியப்புக்கு மேல் வியப்பான செய்தி, சரி, இதன் விளக்கத்தைக் கவனிப்போம்.

பூ நக்கி எது – தேனீ, அதன் கால்கள் ஆறு ஆகவே பூ நக்கிக்கு ஆறுகால், அடுத்தது ஒன்பது கால் எத்தனை? - இரண்டே கால் ஆகவே பறவைகளுக்கு இரண்டு கால்கள் தாமே. பதினேழு கால் எத்தனை? - நாலே கால், ஆகவே யானைக்கு நாலே கால்கள் தாமே,

தாமரை போன்ற முகத்தில் நீல விழிகள் இரண்டு இருப்பது - நீல மலர்கள் பூத்தது போன்று இருக்கிறதல்லவா?

இனி காலமேகப் புலவர் பாடிய பாடலை கவனிப்போம்.

"பூ நக்கி ஆறு கால் புள்ளினத்துக்கொன்பது கால்
ஆனைக்கு கால் பதினே ழானதே - மானேகேள்:
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை காண்"

(புள் - பறவை, முண்டகம் - தாமரை, நீலம் நீலப்பூ (கருங்குவளை) காண் - ஆராய்ந்து கூறு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுடுடுடுடு

காளமேகப்புலவர் - கேட்டவர் கேட்ட படி உடனே பாடுவதில் மிகத் தேர்ந்தவர். ஒரு நாள் அவரிடம் ஒருவர் -''ஐந்து 'டு' தொகுத்து வருமாறு ஒரு வெண்பாப் பாடவேண்டும் ''என்று கேட்டார். - ஒலிக் குறிப்பாகத்தான் 'டுடு டுடு' என வரும் அருணகிரியார் பாட்டில் அவ்வாறு வந்துள்ளது. பொருள் தரும் சொல்லாக எப்படி ஐந்து 'டு' வை அடுக்குவது?

காள மேகப் புலவர் அழகாக அடுக்கிப் பொருளும் அணியும் சிறந்த ஒரு பாடல் செய்தார். குடந்தை நகரில் அவர் இருந்த போது இதனை பாட நேர்ந்தமையால்'' குடந்தைச் சிவபெருமான் கையில் எடுப்பது ''ஓடு'' - நடமிடுவது 'காடு' ஏறுவது 'மாடு' அடியார்க்குத் தருவது ''வீடு'' காதில் அணிவது ''தோடு'' என்றார்.

ஐந்து 'டு' வரும் சொற்கள் உள்ளன அல்லவா? முன் ஐந்து எழுத்துக்களையும் தனியே பிரிந்து ''ஓ கா மா வீ தோ '' என நிறுத்தி 'டுடுடுடுடு' என ஐந்து வையும் நிறுத்தி நிரல் நிறையணி என்னும் பெயர் பெற வைத்தார்.

**''ஓகாமா வீதோ உரைப்பன் டுடுடுடுடு**
**நாகார் குடந்தை நகர்க்கதிபர் - வாகாய்**
**எடுப்பர் நடமிடுவர் ஏறுவர் அன்பர்க்குக்**
**கொடுப்பர் அணிவர் குழைக்கு''**

(பொருள்: நாகர் - வளமமைந்த அதிபர் - தலைவர் வாகாய்- திறமையாய் குழைக்கு - காதிற்கு, எடுப்பர் ஓடு நமிடுவர் காடு ஏறுவர் மாடு. கொடுப்பர் வீடு. அணிவர் தோடு எனப் பொருத்துக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த சாட்சிகளின் இரத்தமே சபையின் வித்தாகும்

"இரத்த சாட்சிகளின் இரத்தமே சபையின் வித்து" என்ற கூற்று சபை சரித்திரத்தில் கி.பி 150 இல் காத்தேஜ் பட்டணத்தில் வாழ்ந்த ஒரு நூற்றுக்கதிபதியின் மகனாகிய தெர்த்துல்லியன் என்பவரால் கூறப்பட்ட கூற்று ஆகும். சட்ட நிபுணராக பயிற்சி பெற்ற இவர் " லத்தீன் சபையின் தந்தை என்ற பெயரைப் பெற்ற ஒரு சிறந்த இறையியலாளர் ஆவார்." இவரே "திரித்துவம்" என்ற சொல்லை முதன் முதலில் இறையியலில் அறிமுகப்படுத்தியவர். இங்கு தெர்த்துல்லியனின் இக் கூற்று அவருடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது மன்றி திருச்சபையின் சரித்திரத்திலும் ஒரு உண்மையான கூற்றாக விளங்குகின்றது. ஏனெனில் கி.பி 180 இல் காத்தேஜ் பட்டணத்தில் இரத்த சாட்சிகளின் தைரியத்தைக் கண்டு மனம் மாற்றமடைந்தவர் தான் இவர்.

திருச்சபையினுடைய சரித்திரத்தில் நடந்த சம்பவங்களை வைத்து ஆராய்ந்து பார்க்கும் போது "இரத்த சாட்சிகளின் இரத்தம் சபையின் வித்து" எனும் கூற்று எவ்வளவு உண்மையானது என்பதனை புரிந்து கொள்ளலாம். சபை சரித்திரத்திற்கு முன் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தையொன்றைப் பார்க்கும் போது "மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். (யோ12:24) எனக் கூறினார். இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் பாவ சுத்திகரிப்பை உண்டாக்கியதோடு கிறிஸ்தவர்கள் சபையாக சேரவும் எருசலேமில் இருந்த சுவிசேஷசம் மற்ற இடங்களுக்கும் பரவ காரணமாக இருந்தது. இப்படியான சூழலில் தான் யூதர்கள் கிறிஸ்தவத்தை அழிக்க முயற்சி செய்து ஸ்தேவானை கொலை செய்தனர். ஆனால் நடந்தது என்ன? இங்கு ஸ்தேவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இரத்தச் சாட்சியின் இரத்தம் சுவிசேஷம் யூதேயாவிலும் சமாரியாவிலும் பரவி புதிய சபைகள் உருவாக வித்தாக அமைந்தது.

இப்படியான இரத்த சாட்சிகளை திருமறையில் மட்டுமல்ல அதற்குப் பின் திருச்சபையின் வரலாற்றிலும் காணலாம். யூதர்களினால் உண்டான துன்பத்தை தொடர்ந்து திருச்சபை வரலாற்றிலே ரோம அரசினால் துன்பங்கள் தொடங்கின. முதல் மூன்று நூற்றாண்டுகளும் ஏறக்குறைய 250 ஆண்டுகள் ரோம அரசு சபையைத்தாக்கியது. அக்காலத்தில் அநேக கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சிகளாய் மரித்தார்கள். ஆனால் சபை வளர்ந்து கொண்டு சென்றது. இவ்வாறு துன்பங்கள் எற்பட்ட போதிலும் திருச்சபை வளர்ந்ததற்கு பல காரணங்களை கூறலாம்.

01) அந்நிய மதங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது கிறிஸ்தவம் நாளாந்த வாழ்கையில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கும், கேள்விகளுக்கும் விடையாக அமைந்தது.
02) முக்கியமாக தங்களுடைய விசுவாசத்துக்கு இரத்த சாட்சிகளாய் மரித்த இரத்த சாட்சிகளின் தைரியம் அந்நிய தெய்ங்களை வணங்கும் மக்களின் மனதைக் கவர்ந்து.

விசேடமாகத் திருத்தூதர் பணிகளின் நூலிலே காணப்படுகின்ற ஸ்தேவன், யாக்கோபு போன்றவர்களின் துணிச்சல் நீரோவின் காலத்தில் அநேகர் இரத்த சாட்சிகளாய் மரிக்க காரணமாய் இருந்தது. இதற்காக நீரோ பேரரசன் தனது நந்தவனத்தை அழித்தான். இப்படியாக கிறிஸ்தவர்களின் இரத்தத்தைச் சிந்த வைத்து கிறிஸ்தவத்தையே அழிக்க முயன்றவன் இறுதியில் தற்கொலை செய்து கொண்டான்.

இத்தோடு கிறிஸ்தவர்களுக்கெதிரான உபத்திரவம் முடியவில்லை. 1ம் நூற்றாண்டிலே தொத்தியனின் (கி.பி 81-96) ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக துன்பப்படுதல் ஆரம்பமானது. ஆண்டுக்கொரு முறை பேரரசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமாக வணங்கி அவனுடைய சிலைக்கு தூபம் காட்டி பேரரசனே ஆண்டவர் என அறிக்கை செய்ய வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனை செய்ய மறுத்த கிறிஸ்தவர்கள் "தேவனற்றவர்கள்" எனக் கூறிக் கொல்லப்பட்டனர் இவ்வாறாக துன்புறுத்தல்களை செய்த தொமித்தியன் கி.பி. 96இல் கொல்லப்பட்டான். இங்கு இரத்த சாட்சிகளின் இரத்தம் சபையின் வித்து என்ற கூற்று சபையை வழிநடத்தி, முன்னின்று செயல்படுத்திய அப்போஸ்தலர்களான பேதுரு, பவுல் நீரோவின் ஆட்சிகாலத்தில் கி.பி 64 இல் இரத்த சாட்சிகளாய் மரித்தார்கள் எனக் கூறப்படுகின்றது. இவர்கள் மரித்தும் தொமித்தியனின் ஆட்சியில் (கி.பி.81-96) அநேகர் இரத்த சாட்சிகளாய் மரிக்கத்தக்கவர்களை உருவாக்கும் வித்தாக அமைகிறது.

தெர்த்துல்லியனின் கூற்றுக்கு ஆதாரமாக முதலாம் நூற்றாண்டில் நடந்த பயங்கரமான உபத்திரவம் அதாவது,

1. கிறிஸ்தவர்கள் காட்டு மிருகங்களின் தோலால் மூடப்பட்டு நாய்களுக்கு இரையாக போடப்பட்டனர்.
2. கிறிஸ்தவர்களின் உடலில் கந்தகத்தை தடவி இரவில் தீவட்டிகளாகப் பாவித்தார்கள்.
3. கிறிஸ்தவ பெண்கள் சிலுவையில் அறையப்பட்டு மிருகங்களுக்கு இரையாகப் போடப்பட்டார்கள்.

ஆனால் இங்கு திருச்சபை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை. 1ம் நூற்றாண்டு இரத்தசாட்சிகளின் இரத்தம் 2ம் நூற்றாண்டு இரத்த சாட்சிகளை உருவாக்கியது. இங்கு திருச்சபை வரலாறு தெர்த்துல்லியனின் கூற்றையே நிரூபிக்கின்றது. அதாவது இவற்றுக்கு பின் 2ம் நூற்றாண்டில் திருச்சபை ட்ராஜன் (கி.பி.98-117) ஷேட்ரியன் (117-138) மார்க்கஸ் அர்லீயஸ் (161-180) ஆகியோரின் கீழ் துன்பங்களை அனுபவித்ததை வரலாறு ரீதியாக நாம் அறியலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கு தெர்த்துல்லியன் தானும் 2ம் நூற்றாண்டை சார்ந்தவராகையால் அவரின் கூற்று பொருந்தி வருகின்றது. இக்காலத்தில் தான் "பொலிக்காப்" என்றவரும் இரத்த சாட்சியாக மரித்தார். இவர் யோவானின் சீடனாக இருந்தாரென்பது பாரம்பரிய எண்ணம். இவரை விசாரணைக்காக அதிபதியிடம் கொண்டு சென்றபோது அதிபதி நீர் மனமாறாவிட்டால் காட்டு மிருகங்களுக்கு முன் போடப்படுவீரென கூறிப் பயமுறுத்தி காட்டு மிருகங்களை இழிவாக எண்ணினால் சுட்டெரிக்கப்படுவீரென்று கூறினார். அப்போது பொலிக்காப் "நீ பயமுறுத்தும் இந்த அக்கினி ஒரு நாள் அணைந்துவிடும் அவபக்தர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் நியாயதீர்ப்பும், நித்திய தண்டனையுமாகிய தீயை பற்றி நீர் அறியாமலிருக்கிறீர்" எனக் கூறி" ஏன் தாமதிக்கிறீர்கள் செய்யவிரும்புவதை செய்யுங்கள் எனக் கூறினார். பொலிக்காப் ஜெபித்த பின் தீ மூட்டப்பட்டது. தீ உடலைச் சுற்றி எரிந்த போது ஒரு சேவகன் அவரைச் குத்தினானென்றும், அந்த இரத்தத்தினால் தீ அணைந்ததோடு அவரும் மரித்தாரென்றும் சிமிர்னா சபை பிலோமியம் சபைக்கு எழுதிய நூலிலிருந்து அறியலாம்.

ஆகவே இங்கு பொலிக்காப் போன்றவர்களின் இரத்த சாட்சியான மரணம் தெர்த்துல்லியனின் கூற்றிற்கு மேலும் வலு சேர்க்கின்றது. அது மட்டுமல்லாமல் அநேக இரத்த சாட்சிகளை உருவாக்கும் வித்தாக அமைகின்றது.

இலங்கை திருச்சபை வரலாற்றிலம் கூட அந்த தெர்த்துல்லியனின் கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை உண்மையானது என்பதை உணரலாம். கி.பி 1544 இல் மன்னாரில் பிரான்சிஸ் சேவியரின் ஊழியத்திற்கூடாக அநேகர் மனந்திரும்பினார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட சங்கிலிய மன்னர் 5000 வீரர்களை திரட்டி கிறிஸ்தவர்களை கொடூரமான முறையில் வெட்டிக் கொன்றான். இங்கு அரத்த சாட்சிகளாக மரித்தவர்களின் தொகை 700ற்கும் அதிகமானவர்கள் என 1545 நவம்பர் 20 இல் யுவான் டிபெயிறா என்ற குருவானவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையிலிருந்த டி சார்ந்த குருஸ் என்ற "இயேசு சபை" குருவானவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த இரத்த சாட்சிகளின் மரணத்திற்கு பின்னர் மன்னாரிலே கிறிஸ்தவர்களின் தொகை அதிக சதவீதத்தில் காணப்படுகின்றதை நாம் அறியலாம்.

ஆகவே தெர்த்துல்லியன் கூறிய "இரத்த சாட்சிகளின் இரத்தமே சபையின் வித்து " என்ற மாபெரும் கூற்று திருச்சபை வரலாற்றில் எவ்வளவு உண்மையான வார்த்தையாக செயற்பட்டது என்பதை வரலாற்றினூடாக அறியலாம். இன்றைய காலகட்டத்தில் மதமாற்றத்திற்கு எதிரான தடைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு திருச்சபைகள் மதவாதிகளால் எரிக்கப்பட்டாலும் திருச்சபை ஒரு போதும் அழிந்து போய் விடாது. இன்றைய காலக் கட்டத்திலும் இரத்த சாட்சிகளாக ஒரு சிலர் மரிக்கலாம், கொல்லப்படலாம். ஆனால் ஒவ்வொரு தியாகமும் வித்தாகவே அமையும் இவ்வாறான ஒவ்வொரு நிகழ்வுகளும் 'இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து' என்ற தெர்த்துல்லியனின் கூற்றினை உண்மையாக்கி அதற்கு மேலும் வலு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

சகோ.எம்.ஜே.லூக்

- ✓ விவேகமுள்ளோர் தம் அறிவை மறைத்துக் கொள்வர். மதிகேடரோ தம் மூட எண்ணத்தை விளம்பரப்படுத்துவார்.
- ✓ வீட்டில் உணவில்லாதிருந்தும் வெளியில் பகட்டாய்த் திரிவோரை விட தம் கையால் உழைத்து எளிய வாழ்கை நடத்துவோரே மேல்.
- ✓ நாவைக் காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்கிறார்: நாவைக் காதவன் கெட்டழிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Christa Seva Asrama Jaffna

The Chrita Seva Asrama was started in may 1939 and is situated five miles to the north of Jaffna in Ceylon It maintains an interdenominatinal Character and has on its Board the Heads of the three Churches working in that area.

The Asrama was started for the purpose of inter alia serving as a home for Unadjusted converts, experimenkey in indigenous methods of worship, serving as a base for evangelists who may be available for special service in any part of the Island, forming an adegate Library of reference for purposes of study and the production of literature, serving as a place of retreat for lay and ministerial workers and for evangelistic work.

The Asrama is supported by friends and all the buildings and land werekind gifts of friends It aims at self support and all members of the Ashram do definite hours of work in the garden An effort is being made to build up an industrial department also, not merely for its support but to introduce it into the village round about and help them to get a better livelihood. It is used a great deal for retreats by the staff and students of schools in Jaffna and the chapel built in an oricutal style is a gift of the student christian Movement of the place.

At the beginning of this year the Asrama Sent out a Young lady to help in the work of Seva Mandir, Porto Novo and She is being supported there by the Asrama. Plans are being made to send out some more to do evangelistic work, At present members of the Asrama go out to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

do evangelistic work and also help in the work of the Churches round about It is a constant place of retreat for many people in Jaffna

There are nearly fifteen people on average living there There is an ordained Minister of the South Indian United Church in charge of the work while two others are in training at Pasumalai for evangelistic work.

P.Chenchiah **(1952 இல் எழுதப்பட்ட அறிக்கை)**

## ஈசனுவக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ள லடியினைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டாளிசேர் பொற்கொன்றையோ பாரிவிலாக் கற்பசுமோ
வாட்ட முநாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலிலாப் பூவுமல்ல
நாட்ட விழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

-சுவாமி விபுலானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னன் தாவீதின் நற்செய்திப்பணி

பக்திக்கு வித்தாக இருப்பது இசை இசைக்கலைஞனாகத் தாவீது மன்னன் இல்லாமல் பக்தியோடு இசையைப் பாடிய பாவலனாகவே வாழ்ந்தார். அவருடைய பக்திப்பாடல்களும் இசையும் யாவே வழிபாட்டைச் சிறப்பித்தது, என்ற உண்மையைத் திருமறை கூறுகின்றது. தாவீது மன்னன் சிறந்த ஒரு வீரன் என்பதை ஏபிரேய அரசவரலாறு சான்று சொல்கின்றது. இம்மாவேந்தன் எபிரேய வரலாற்றில் பன்னிரு குலத்தவரையும் ஒரே குலமாக்கிய பெருமைக்குரிய மன்னன். மன்னன் தாவீது இறைவனுடைய செயலாற்றலை அனுபவித்த அனுபவ அறிவுள்ள இறை அறிஞன் குடும்ப அன்பில் குறைவு இல்லாது வாழ்ந்தான். இறை அன்பை இறுதிவரை காத்துக் கொள்வதில் பெருமை கண்டான். நல்ல ஒரு திட்டப்பணிப்பாளராகச் செயல்பட்டார். நற்செய்திப் பணியாளராகவும் செயல்ப்பட்டார். இத்தகைய நல்ல இயல்புகளையுடைய தாவீது மன்னனிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய அறிவு பலவும் நமக்குண்டு. தாவீது மன்னனையும் அவருடைய ஆட்சித் திறமையையும் பேசுவதில் நாம் பெருமை கொள்வதுண்டு. சின்னவன் பெரியவன் என்ற நாடகத்தை நாடகமாகவே பார்த்து மகிழ்ச்சி அடைந்திருக்கின்றோம். சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்கள் என்ற சொற்றொடரோடு தாவீது கோலியாத்துவுடைய யுத்தத்தைத் தொடர்புபடுத்தி ஈழத்தமிழர் வரலாற்றையும் இணைத்துப்பார்த்து ஆறுதல் பெற்றும் இருக்கின்றோம். தாவீது கோலியாத்துடைய யுத்தத்தில் தாவீது நற்செய்திப்பணியாளராகவே செயல்பட்டார் என்பதை சாமுவேலுடைய முதலாவது புத்தகம் பதினோராம் அதிகாரத்தில் படிக்கின்றோம். முதலாவது கோலியாத்துடன் ஏபிரேய படைவீரர் யுத்தம் செய்யப்பயந்து இருந்த நேரம் தன் உடன் பிறப்புக்களுக்கு தன் தகப்பன் ஈசாய் தந்த உணவுப் பொட்டலத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை முகத்துக்கு கொண்டு போன தாவீது கண்ட காட்சி அவனுக்கு வேதனையை உண்டு பண்ணியது.

ஒரு புறம் கோலியாத்துடைய அகங்காரம் நிறைந்த வார்த்தைகள் அவனுடைய உருவம். அடுத்தது வீரம் இல்லாத இறைநம்பிக்கை இல்லாத எபிரேயப் படைவீரர். அஞ்சாமல் வாழ வேண்டியவர் அஞ்சியஞ்சிச் சாவது கண்டு துக்கப்பட்டவன் படைமுகத்தில் படைவீரருக்கு பயம் நீக்கும் நற்செய்தி கூறுவதை சாமுவேலுடைய முதலாவது புத்தகம் 17:26 வசனத்தில் படித்து உணரமுடிகிறது.

"ஜீவனுள்ள தேவனுடைய சேனையை நிந்திக்கிறதற்கு விருத்த சேதனம் இல்லாத பெலிஸ்தன் எம்மாத்திரம்"

இங்கே ஜீவன் இல்லாது இருந்த எபிரேயப் படை வீரர்களுக்கு ஜீவனை உண்டாக்கும் நற்செய்தியாளராகப் பணி ஆற்றினார் பயத்தோடு இருந்தவர்களுக்குப் பயம் நீக்கும் பணியை பக்தியுடன் செய்தான் என்று பார்க்க முடிகின்றது. அவனுடைய பக்தியையும், பக்தியோடு கூடிய வீரத்தையும் தாவீதுடைய உடன் பிறப்புக்களால் உள்வாங்கிக் கொள்ள முடியாது போய்விட்டது. தாவீதுடைய அண்ணன் எலியாப் தாவீதைப் பார்த்துக் கூறியது. சாமுவேலுடைய முதலாவது புத்தகம் 17:28 இறுதிப்பகுதி "உன் துணிகரத்தையும் உன் இதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்றான்".

இதே போன்று ஆதியாகமம் 37:10 யாக்கோபு யோசேப்பின் தரிசனம் பற்றிக் கேட்ட போது கடிந்து கொண்டான் என்று அறிகின்றோம். உண்மையை அறியும் ஆற்றல் இல்லாத உடன் பிறப்புக்களுக்கு உண்மையை அறிய வைக்கும் நற் செய்தியாளராகத் தாவீது செயல்பட்டான்.

தாவீதுனுடைய நற்செய்தியைக் கேட்ட ஏபிரேய வீரர்கள் மன்னன் சவுலிடம் செய்தியைக் கொண்டு சென்றார்கள். செய்தியைக் கேட்பவர்கள் கெட்டவர்களாக மட்டும் இல்லாமல் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்பவர்களாகவும் இருக்கவேண்டும். என்ற உண்மை உறுதி செய்யப்படுகின்றது இதே உண்மையை யோவான் 4:8 - 28 சமாரியப் பெண் இயேசுவிடம் கேட்ட செய்தியை ஊருக்குள்ளே கொண்டு ஓடினாள், என்பதில் இருந்த உண்மை வலுப்பெறுகின்றது. படைமுகத்திலே தாவீதிடம் இருந்து, செய்தி கேட்டவர்கள் மன்னனிடம் சென்றதினால் செய்தி இப்போ சவுலுடைய அரண்மனை வரை சென்றது. நற்செய்தியாளன் தாவீது அரண்மனைக்குள் காலடி எடுத்து வைத்து நடந்தான். சென்றவன் மன்னனுக்கு தந்த நல்ல செய்தி சாமுவேலுடைய முதலாவது புத்தகம் 17:32

"இவன் நிமித்தம் ஒருவனுடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை" என்று கூறி பயம் போக்கும் நற்செய்தியை தாவீது சொன்னான். இப்போ சவுலுடைய உள்ளத்திலே ஒரு வினா எழுந்திருக்க வேண்டும் ஏசாயா 6:8 வசனத்தின் ஆரம்பத்தில் "யாரை நான் அனுப்புவேன் யார் நமது காரியமாய் போவான்" என்று யாவே எசாயாவிடம் கேட்டது போல சவுலும் தனக்குள்ளே கேட்டிருக்கக் கூடும்.

அவ்வினா சவுலின் வாயிலிருந்து வெளியே வரவிடாமல் தாவீது விடைகூறி மன்னனை அமைதிப்படுத்தும் நற் செய்தியாளனாக செயல்படுத்துவதை அறிந்து அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

மறுபடியும் தாவீது தனது வீரத்தின் அனுபவத்தையும் வீரத்துக்கு காரணம் என்னுடைய சரீர பெலம் அல்ல கர்த்தருடைய பெலம் என்ற இறுதி முடிவுக்கு வருவதையும் சாமுவேலுடைய முதலாவது புத்தகம் 17:37 இல் படிக்கும் போது மனத்தெளிவு வருகிறது. இவ்வுண்மையை பரிசுத்த பவுலடிகள் பிலிப்பியர் 4:13 இல் என்னைப் பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவினாலேயே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலம் உண்டு என்று கூறுவதை ஒப்பிடமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவீது யாவேயின் திருப்பெயருக்கு வலுவூட்டும் நற்செய்தியை சவுல் மன்னனுக்கு கூறினான். ஜெகோவாவைத் தன் கவசமாக்கி கொணடவன் போர்க்கவசங்களை எல்லாம் களைந்து வைத்து விட்டு கவுணோடும் கற்களோடும் போர்களம் புறப்பட்டான்.

யாவேயைத் தன் கவசமாக்கிக் கொண்ட தாவீதைக் கண்ட கோலியாத்து தாவீதைப் பார்த்து என்னை நாய் என்று நினைக்கின்றாயா? என்று சாமுவேல் முதற் புத்தகம் 17:42 கூறுகிறது. கோலியாத் தன்னை நாயா? என்று கேட்பதில் இருந்து தான் குறைவுள்ளவனென்பதை ஒப்புக் கொள்ளுவது போலும் ஒரு நல்ல செய்தி தாவீதுக்கு கிடைத்தது போலும் சிங்கத்தையும், கரடியையும் கொல்ல வலுத்தந்த யாவே நான் நாயோ என்று கேட்டும் இவனைக் கொல்லுவது எவ்வளவு இலேசானது என்று உணரவாய்ப்பு இருந்திருக்கக் கூடும். இப்போ தாவீது கோலியாத்திற்கு நற்செய்தி கூறுவதை சாமுவேலுடைய முதலாவது புத்தகம் 17:45 - 47 வசனங்களில் படிக்கின்றோம்.

**“நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகின்றேன்”**

இது தாவீதுடைய விசுவாச அறிக்கை. கோலியாத்துடைய காதுகள் கேட்கும் படி கூறி கோலியாத்துக் குள்ளே நற்செய்தியை அனுப்பும் ஒரு நற்செய்தியாளராகக் காணப்படுகின்றான் அது மட்டுமன்றி என்னுடைய அறிக்கை உலக அறிக்கையாக மாறும் என்ற முன்னோக்குள்ள நற்செய்தியாளராகவும் காணப்படுவதுயாவே தாவீது வைத்த அன்புக்கு அச்சாரமாகிறது.

பட்டயமும் ஈட்டியும் படைமுகத்திற்கு வேண்டும் இவைகள் யாவேயின் பார்வையில் குறைவுள்ளது. குறைவுள்ளதில் நமது பெலம் இல்லை. நிறைவுள்ளதிலேயே நமது பெலம் என்ற தன் கவணில் கல்லை வைத்து வீசி விட்டான். கோலியாத்துடைய நெற்றியில் பட்டு பதிந்ததினால் நிலத்தில் குப்புற விழுந்து மரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரிக்கு முன் கோலியாத்தும் தாவீதிடமிருந்து நற்செய்தியைக் கேட்டவனாகவே மரித்தான். போர்க்களத்தில் பயந்திருந்த படைவீரர்களுக்கு நற்செய்தி தடுத்த அண்ணன்மாருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. மன்னன் சவுலுக்கு நற்செய்தி கிடைத்தது. போர் முடிந்தது என்று கூறும் நற்செய்தி மக்களுக்கு வந்து சேர்ந்தது.

பன்முகப்பட்ட வழியிலும் நற்செய்தியைச் சொல்லி அமைதி வாழ்விற்கு எல்லோரையும் அழைத்துச் சென்ற தாவீதைப் போல நற்செய்தியாகிய இயேசுவையும் அவருடைய மரணம், அடக்கம், உயிர்ப்பு, வருகை ஆகிய செய்தியை போராட்ட வாழ்விலும் தாவீதைப் போல சொல்ல நம்முடைய அறிவல்ல, நம்முடைய விசுவாச அனுபவமே முக்கியம்.

AVJ

## என் அப்பா தந்தையே

அன்பும் நம்பிக்கையும் கருணையும் பணிவுங் கொண்டு

உன்னை பின்பற்ற வேண்டும்

அமைதியில் மூழ்கி உன்னக் காண வேண்டும்

தூய உள்ளம் பெற்று உன்னைத் தரிசிக்க வேண்டும்

உன் குரல் கேட்க எனக்கு பணிவு வேண்டும்

உனக்குத் தொண்டு செய்ய எனக்கு அன்பு மனம் வேண்டும்

உன்னோடு இணைய எனக்கு நம்பிக்கையுள்ளம் வேண்டும்

இறைவா இவற்றை எனக்குத் தந்தருள்வாயாக,

-டாக் உறா மர்உறால்டு

(முன்னால் ஜ-நா. பொதுச் செயலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திமடல்

## கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றார்



திரு.செல்லப்பா ஜெயரட்ணம் அவர்கள் இலங்கை கிறிஸ்தவ இறையியல் குருத்துவக் கல்லூரியின் பரிபாலனக் குழுவில் - நெடுங்காலமாகச் சிறந்த உறுப்பினராய்த் திகழ்ந்தவரும், யாழ் ஆதீன நாவலித் திருச்சபையின் தலை சிறந்த உறுப்பினராக விளங்கியவரும், யாழ் ஆதீனத்தின் பொருளாளராகக் கடந்த சில ஆண்டுகளாக நற்பணியாற்றியவருமான திருவாளர் செல்லப்பா ஜெயரட்ணம் அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியதையிட்டு மகிழ்வுடன் அன்னாரை பாராட்டுகின்றோம்.

இவர் விவசாயத் துறையில், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், இந்தியாவிலும், இங்கிலாந்திலும் அதே துறையில் அமெரிக்காவிலும் தொடர்ந்து படித்துப் பல பட்டங்கள் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது பணியில் இருந்து ஓய்வு பெற்ற இவர் இப்போது உடுவில் மகளிர் கல்லூரியில் முகாமையாளராகப் பணியாற்றி வருகிறார். யாழ் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகக் கடந்த ஒன்பது ஆண்டுகளாகப் சிறந்த பணியாற்றி வருகின்றார். தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆதீனத்தின் தலை சிறந்த உறுப்பினராகப் பல துறைகளிலும் மிளிர்ந்த அன்பர் திரு.ஜெயரட்ணம் அவர்களை எமது குருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் உளமார வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீடு:

சுன்னாகத்திலுள்ள கிறிஸ்தவ இறையியல் குருத்துவக் கல்லூரியின் திருச்சபை வரலாற்றுத் துறையில் சிரேஸ்ட விரிவுரையாளராய்ப் பணியாற்றி வரும் அருட்திரு.பென்ஜமின் ஜெயராஜா அவர்கள் எழுதிய "பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும்" என்ற நூல் வெளியீட்டு விழா அதிவண பேரறிஞர் எஸ்.ஜெபநேசன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்கல்லூரி பேராயர் அறிவர் எஸ்.குலேந்திரன் நிறைவு மண்டபத்தில் நடைபெற்றது.

✝ இறைவணக்கம் - திரு.சி.பி.பவிங்க் அவர்களால் நடத்தப்பட்டது. அருட்சகோ.பி.தேவமித்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடக்கவுரை திருமதி.நந்தினி பத்மதயாளன் அவர்களாலும், தலைமையுரை பேராயர் அறிவர் எஸ்.ஜெபநேசன் அவர்களாலும் வாழ்த்துரை அருட்சகோ.செல்வி.ஜே.இரத்தினசிங்கம், ஆய்வுரை திரு.ஈ.குமரன் (தமிழ் விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்) - ஏற்புரை, அருட்திரு.பி.ஜெயராஜா அவர்களால் நிகழ்த்தப்பட்டன பேராயர் அவர்களின் ஆசீர்வாதத்துடன் விழா இனிது முடிவுற்றது.

✝ எமது இறையியல் கல்லூரியின் விரிவுரையாளரும் பதிவாளருமான அருட்திரு.ரி.தேவநேசன் அவர்கள் தன்னுடைய மேல்படிப்பை சிங்கப்பூரில் உள்ள திரி தத்துவக் கல்லூாயில் முடித்துக்கொண்டு வருகை தந்துள்ளார். இவரை வாழ்த்தி வரவேற்கிறோம்.

✝ யாழ் கிறிஸ்த்தவ ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்த இறையியல் மாநாடு கடந்த மே மாதம் 2 - 5ம் திகதிகளில் கருணா நிலையத்தில் நடைபெற்றது. இதில் எமது கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

✝ எமது மாணவர்கள் மே மாதம் 7 - 7ம் திகதி வரையான காலப்பகுதியில் கண்டியில் உள்ள சத்தியோதய நிறுவனம். கெமிசேவசேவன பண்ணை நிறுவனம் ஆகியவற்றின் அனுசரனையுடன் களப்பயிற்சிக்காக மலையகப் பகுதிக்குச் சென்று, மக்களின் வாழ்வுச் சூழல், அவர்கள் படும் துன்பம் போன்ற பலவற்றை அறிந்து கொண்டோம். இக் களப் பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் களஞ்சியம்

ஆண்டு சந்தா(அஞ்சல் செலவு உட்பட) 200/=
தனிப்பிரதி 50/=

தொடர்பு கொள்க:
" **இறையியல் களஞ்சியம்**"
இலங்கை கிறிஸ்துவ குருத்துவக் கல்லூரி,
மருதனார்மடம்,
சுன்னாகம், யாழ்ப்பாணம்,
இலங்கை

# IRAI IYAL KALANJIYAM

A Tamil Theological quarterly
Annual subscription (Including postage within Srilanka) Rs 200/=
Single copy 50/=

Subscription and Correspondence to: -
Irai Iyal Kalanjiyam
Christian Theological seminary of srilanka
maruthanarmadam,
Chunnakam, Jaffna
Srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org